விலை ரூபா: 8.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 14 ஞாயிற்றுக்கிழமை (27.03.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 98

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு

- பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
- வங்கிக் கணக்கு அவசியமில்லை
- நீடிக்கப்பட்ட சேவை நேரம்
- 365 நாள் சேவை
- 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்

THIRUMURUGAN COM NET

T.P. 021 2227310, 021 2227555, 021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com

46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

# அரசு - புலிகள் இணைக்கத்துடன் விரைவில் பொதுக்கட்டமைப்பு

## ஜனாதிபதி சந்திரிகா உறுதியளிப்பு



(கொழும்பு)

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்த அழிவுகளிலிருந்து நாட்டை மீளக் கட்டியெழுப்ப அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மிடையே பொதுக்கட்டமைப்பொன்று மிக விரைவில் உருவாக்கப்படும். இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உறுதி படத் தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 10.5 பில்லியன் இலங்கைக்கு உதவி

(கொழும்பு)

சுனாமி நிவாரண நிதியாக வெளிநாடுகளிலிருந்து 10.5 பில்லியன் ரூபா இலங்கைக்குள் வந்துள்ளதாக கொழும்பு மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இத்தொகையில் 1.4 பில்லியன் ரூபாய்க்கும் அதிகமாக இலங்கை அரசுக்கு நேரடியாக மத்திய வங்கியூடாக வழங்கப் பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழத் தொலைக்காட்சி ஒளிபரப்பு சேவை ஆரம்பம்

(கிளிநொச்சி)

தமிழீழ தேசிய தொலைக்காட்சி தனது சேவையை நேற்று முதல் ஆரம்பித்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளிலும் இச் சேவை ரி.ரி.என். தொலைக்காட்சி ஊடாக ஒளிபரப்பாகின்றது.

தமிழீழ தாய்கத்தின் தேசியக் குரலை வெளிப்படுத்துகின்ற ஒளி ஊடகமாக தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி தனது சேவையை ஆரம்பித்துள்ளது.

தாயகத்திலிருந்து தற்பொழுது 30 நிமிடங்களுக்கான ஒளிபரப்பு இடம்பெறுகின்றது. மேலும் இதன் சேவை நேரம் 1.30 மணித்தியாலமாக விரைவில் அதிகரிக்கும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் நாளை பேரணி

படையினரின் அராஜகப் போக்கைக் கண்டித்தும் அரசின் மெத்தனப் போக்குக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் வடமராட்சியில் நாளை மாபெரும் கண்டனப் பேரணியொன்று இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறை சிவன்கோயிலில் பேரணி ஆரம்பமாகி அங்கிருந்து பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சென்றடைந்து அங்கு பிரதேச செயலரிடம் மகஜர் கையளிக்கப்படும்.

பின்னர் பிரதேச செயலகத்திலிருந்து தம்பசிட்டியிலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகம் வரை சென்று அங்கும் மகஜர் கையளிக்கப்படும்.

காலை முதல் நண்பகல் வரை இடம் பெறும் இம் மக்கள் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நண்பகல் வரை வர்த்தக நிலையங்களைப் பூட்டி ஒத்துழைப்பு வழங்குமாறு வடமராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் வடமராட்சி வர்த்தகர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(இ-101)

## போர்நிறுத்த காலத்தில் மட்டும்

# இராணுவத்தில் 10 ஆயிரம் பேர் புதிதாக சேர்க்கப்பட்டனர்

(கொழும்பு)

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் இதுவரை இராணுவத்திற்கு சுமார் 10 ஆயிரம் பேர் புதிதாகச் சேர்க்கப் பட்டுள்ளனர்.

இவர்கள் இராணுவ சிப்பாய்களாகவும் படை அதிகாரிகளாகவும் சேர்க்கப்பட்டுள்ளனர் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வருடத்திற்கு இருதடவைகள் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும் ஒருதடவைக்கு ஆயிரத்து ஐந்நூறு முதல் 2 ஆயிரம் பேர்வரை படைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவதாகவும், அத்துடன் வருடத்திற்கு இருதடவைகள் புதிய அதிகாரிகள் சேர்த்துக் கொள்ளப்படுவதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(இ-4)

## கிழக்கில் புலிகள் மீதான தாக்குதல்கள்

# ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நாளை முதல் ஆரம்பமாகின்றது

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் அண்மைக் காலங்களில் விடுதலைப் புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் பற்றி ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணைகள் நாளை ஆரம்பமாகவுள்ளது.

விசாரணைகள் நாளை முதல் 5 நாட்கள் அம்பாறையிலும் 3 ஆம் திகதிவரை மட்டக்களப்பிலும் நடைபெறவுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



சுனாமியினால் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் படையினரால் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடத்தப்பட்ட சர்வமதப் பிரார்த்தனையின் ஒரு காட்சி.

# புண்பட்ட இதயங்களை ஆற்றுதலே முதன்மையானது

## ஈஸ்ரர் செய்தியில் யாழ். ஆயர்

(யாழ்ப்பாணம்)

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களை உளவியல் ரீதியாக ஆற்றுப்படுத்தும் பணிக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

ஈஸ்ரர் தினத்தையொட்டி அவர் விடுத்துள்ள செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆண்டவர் யேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகிய மறை நிகழ்ச்சிகளை சந்திக்கின்ற தவக்காலம் கிறிஸ்தவ மக்கள் அனைவருக்கும் செப தவநோன்பின் காலமாகும்.

இக்காலம் எமது வாழ்வையும் பணியையும் அலசி ஆராய்ந்து புதியவாழ்விற்கு அத்திபாரம் இடும் காலமாகும். இக்காலத்தை முடித்து ஆண்டவர் யேசுவின் உயிர்ப்பின் மகிழ்வில் நிறைந்திருக்கும் அனைவருக்கும் உயிர்ப்பு விழா வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். எல்லாக்காலத்தையும் விட இந்தத் தவக்காலம் பணிசெய்ய நமக்கு பல அழைப்புக்களைத் தந்த காலமாகும். கடந்த ஆண்டில் கிறிஸ்மஸ் விழாவை கொண்டாடிய மறுதினம் மக்கள் அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கிய ஆழிப்பேரலை பேரழிவும் மனிதாபிமான ரீதியில் அன்புப் பணிபுரிய பல கோணங்களில் எமக்கு அழைப்பு விடுத்திருந்தது.

சொந்த பந்தங்களையும் வாழ்நாள் சொத்து முழுவதையும் ஒருசில நொடிப் பொழுதுகளில் கண்மூடித்திறக்கும் முன்னர் இழக்கின்ற அனுபவம் ஒரு பயங்கரமான அனுபவமாகும். நீண்டகாலப் போரும் அதன் அழிவுகளும் கொணர்ந்த அழிவையும் வேதனையையும் நான்கு நிமிட இயற்கை அனர்த்தம் தந்து எம்மை அதிர்ச்சியிலும் சோகத்திலும் ஆழ்த்தியுள்ளது.

சாவை வென்று வெற்றியின் வேந்தனாக உயிர்த்தெழுந்த யேசு எமது அன்றாட வாழ்விலும் எமது பொது வாழ்விலும் எதிர்நோக்குகின்ற அனைத்து துன்ப துயர அனுபவங்கள் வேதனைமிக்க போராட்ட நிகழ்வுகள் அனைத்திலும் வெற்றி பெற்று ஒரு புதிய வாழ்வுக்காய் உயிர்த்தெழ உயிர்த்த யேசு அருள்பாலிப்பாராக என்று அவர் விடுத்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

SWISS Mineral Water

Buy Swiss Mineral and win several lakhs worth of prices



Head office
Gbn, Posfach
8026 Zurich, Switzerland,
Tel.+41 243 82 59

Factory
231, Temple Road,
Nallur, Jaffna.
Tel.+94 77 312 69 63

சுவிஸ் மினறலின் யாழ்குடா நாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள் யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம். தொலை பேசி : 0094 21 222 2662

# பொதுக் கட்டமைப்பில் விடுதலைப் புலிகளை இணைத்தால் கடுமையாக எதிர்ப்போம்!

## ஜே.வி.பி. எம்.பி. இ.சந்திரசேகரன்

(கொழும்பு)

ஆழிப் பேரலை அழிவு தொடர்பான நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான பொதுக் கட்டமைப்புக் குறித்து அரசும் விடுதலைப் புலிகளும் இணக்கம் கண்டாலும் அதற்காக அரசிலிருந்து ஜே.வி.பி. வெளியேறி விடாதென்றும் அதற்கான உத்தரவாதம் தமக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்த கருத்துக்களை ஜே.வி.பி. நேற்றுமுன்தினம் திட்டவட்டமாக நிராகரித்துவிட்டது.

ஜே.வி.பியின் உயர் மட்டத் தலைவர்கள் எவரும் அவ்வாறான உறுதிமொழியை வழங்கவில்லையென்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரான இராமலிங்கம் சந்திரசேகரன் உறுதியாகத் தெரிவித்தார்.

பொதுக் கட்டமைப்புத் தொடரபாக புலிகளுடன் அரசு இணக்கத்துக்கு வருவதை ஜே.வி. பி. தொடர்ந்து கடுமையாக எதிர்க்கும் என்றும் அவர் சொன்னார்.

இவ்வார முற்பகுதியில் பி.பி.சி. தொலைக்காட்சிக்குப் பேட்டி அளித்திருந்த வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம பொதுக்கட்டமைப்புக் குறித்த ஜே.வி.பியின் நிலைப்பாடு பற்றிக் கேள்வி எழுப்பப்பட்டது.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாகப் புலிகளுடன் அரசு ஓர் இணக்கத்துக்கு வருமானால் அரசிலிருந்து ஜே.வி.பி. வெளியேறிவிடும் என அக்கட்சித் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க இம்மாத முற்பகுதியில் 'ரொய்ட்டர்' செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய பேட்டியைச் சுட்டிக்காட்டி கதிர்காமரிடம் வினா எழுப்பப்பட்டது.

'ரொய்ட்டருக்கோ வேறு எவருக்குமோ யாரும் எப்படியும் கருத்துக் கூறியிருநதாலும் அரசிலிருந்து வெளியேறுவதில்லை என ஜே.வி.பி. தலைவர்கள் தனிப்பட்ட முறையில் உறுதி தெரிவிக்கிறார்கள் என்று அந்தப் பேட்டியில் பதிலளித்திருந்தார் கதிர்காமர்.

அந்தக் கருத்துக் குறித்து உண்மை நிலை என்ன என்று ஜே.வி.பியின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரான சந்திரசேகரனிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -ஜே.வி.பியின் தலைவர்கள் எவரும் அவ்வாறான உறுதிமொழிகளை அமைச்சருக்கு வழங்கவில்லை.

உத்தேச பொதுக்கட்டமைப்பு உருவாகுமாயின் எமது கட்சி அப்போது தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும். விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் ஜனநாயக ரீதியாக மக்களால் அங்கீகரிக்கப்பட்டவர்களல்லர்.

வடக்கு - கிழக்கின் ஒரு சிறிய பிரதேசமே அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. பெரும்பாலான பிரதேசம் அரசின் கட்டுப்பாட்டில் உள்ளதால பொதுக் கட்டமைப்பொன்றை உருவாக்கி அதில் கூடுதலான வீத அங்கத்துவத்தை விடுதலைப்புலிகளுக்கு வழங்குவதை நாம் ஆட்சேபிக்கின்றோம்.

இவ்வாறான பொதுக் கட்டமைப்பொன்று உருவாகுவதன் மூலம் வடக்கு - கிழக்கில் பெரும்பான்மையான அதிகாரம தமக்கிருக்கிற தென்பதை சர்வதேச சமூகத்திற்கு காண்பிப்பதற்கும் தாம் பலவீனமான நிலையில் இல்லையென்பதை சித்திரிப்பதற்குமாகவே விடுதலைப் புலிகள் இந்தப் பொதுக கட்டமைப்பை பெரிதும் விரும்புகின்றனர்.

எனவே, அவ்வாறான நோக்கங்களைக் கொண்ட- மக்களை அடிமைப்படுத்தக் கூடிய - இந்தத் திட்டத்தை ஜே.வி.பி. முழுமையாக ஆட்சேபிக்கின்றது.

பொதுக் கட்டமைப்பு உருவானால் ஜே.வி. பி. சில பாரதூரமான முக்கிய தீர்மானங் களை எடுக்கும். அது அப்போது அறிவிக்கப்படும். இவ்வாறு சந்திரசேகரன் எம்.பி. மேலும் தெரிவித்தார். (க)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களின் நல்லுரிமைகளைப் பேணிக்காக்கும் முகமாக, மேற்படி மாணவர்களின் பெற்றோர், பாதுகாவலாகளின் கூட்டம் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு யாழ். பல்கலைககழக மருத்துவபீட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சத்திர சிகிச்சை தொடர்பான பிரச்சினைகளை இனிவரும் காலங்களில் சுமுகமாகத் தீர்த்து வைத்தற் பொருட்டு ''மருத்துவ மாணவர்களின் பெற்றோர் பாதுகாவலர் சங்கம்'' என்கின்ற அமைப்பை ஆரம்பிக்கும் நோக்கத்துடனேயே இக் கூட்டம் நடைபெறவுள்ளதாக மருத்துவபீட மாணவர் ஒன்றிய தலைவர் காண்டீபன் தெரி வித்தார். (க-74)

## இடைத்தங்கல் முகாம்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபா பிரிவில் சுனாமி கடற்பேரலையால் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 75 குடும்பங்களுக்கு 15 இடைததங்கல் முகாம்கள் அமைக்கப்படவுள்ளன.

மாமுனை, செம்பியன்பற்று மருதங்கேணி, தாளையடி,அரசடி, வாரிவெட்டன்துறை, உடுத்துறை இடைக்கால பாடசாலை வீதி, விநாயகபுரம், நித்தியாவெட்டை, கட்டைக்காடு மற்றும் சுண்டிக்குளம் கல்லாறு பகுதியிலும் விரைவில் இடைத்தங்கல் முகாம் அமைக்கப்பட்டு மக்களை குடியிருத்தப்படவுள்ளது.(க-35)

# வடக்கு - கிழக்கு பிரதேச தபால் சேவையில் குறைபாடுகள் இருப்பதை ஏற்றுக் கொள்கிறோம்

## பிரதி அமைச்சர் ரோஹித்த் அபேகுணவர்த்தன

(கொழும்பு)

தபால் சேவையில் வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் பல்வேறு குறைபாடுகள் நிலவுகின்றதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம் என தபால் தொலைத் தொடர்புகள் பிரதியமைச்சர் ரோஹித்த அபேகுணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில தமிழ் மொழிமூலமான ஊழியர்களை தபால் சேவையில் அமர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தமிழ் மொழி மூலமான நடவடிக்கைகளுக்கு உரிய இடத்தை வழங்காமையால்தான் நாட்டில் இனப்பிரச்சினை ஏற்படடது என்றும் அமைச்சர் கூறினார்.

தபால் அலுவலக கட்டளை சட்டவிதிகள் தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் பிரதி அமைசசர் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் பிரதி அமைச்சர் தொடாந்து கருத்துத் தெரிவிக்கையில, வடக்கு-கிழக்கு தபால் சேவையில பல்வேறு குறைபாடுகள் நிலவுகின்றன. அப்பகுதியில் ஏனைய மொழி மூலமாக வரும் கடிதங்களின் முகவரிகளை வாசிக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இதனால் அப்பகுதி மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே வடக்கு-கிழக்குப் பகுதிகளில் அனுபவமுள்ள தபால் ஊழியர்களை நியமிக்க நடவடிக்கை எடுப்போம். அதற்கான உயர்மட்ட நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்வோம்.

தபால் சேவையை நவீன மயமாக்குவதற்கான திட்டங்களை வகுத்து வருகின்றோம். நாட்டில் 4 ஆயிரத்து 703 தபால் நிலையங்கள் செயற்படுகின்றன.

அந் நிலையங்களில் 22 ஆயிரத்து 470 ஊழியர்கள் பணிபுரிகின்றனர்.

இந் நிலையில் இந்தளவு விசாலமான திணைக்களத்தை உடனடியாக மாற்றியமைத்துவிட முடியாது.

தபால் திணைக்களத்துக்கு பட்டதாரிகளை இணைத்துக் கொள்வது தொடர்பாக தொழிற்சங்கங்கள் அதிருப்தியில் உள்ளன. அவற்றை சுமுகமாக தீர்த்து வைக்க நடவடிக்கை எடுப்போம்.

தமது உரிமைகளை நியாயமான முறையில் வென்றெடுக்க தொழிற்சங்கங்கள் போராடினால நாம ஆதரிப்போம். நியாயமற்ற விதத்தில் போராட்டம் நடத்தினால் நாங்கள் சட்டரீதியான நடவடிக்கை எடுப்போம்.


தனியார் தொலைபேசி தொடர்பு வசதிகளை வழங்கும் நிறுவனங்கள் தமது பிராந்திய தொலைத் தொடர்பு கோபுரங்களை அமைப்பதில் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளன.

அந்தவகையில் டயலொக், செலடர், ஹட்சிஸன் போன்ற நிறுவனங்கள பிராந்திய தொலைத தொடர்பு கோபுரங்களை அமைக்க காணிகளை பெறமுடியாமல் இருக்கின்றன.

காணிகளை அரசாங்கத்தாலும்வழங்க முடியாதுள்ளது. அத்துடன் தனியாரும் காணிகளை வழங்க விரும்புவதில்லை.

இந் நிலையில் மேற்கண்டவாறான பிரச்சினைகளைத் தீாத்து வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். அந்த குறைபாடுகளை தீர்த்து வைக்க நாமும் நடவடிக்கை எடுப்போம்.

தபால் திணைக்களத்தின் வருமானத்தை அதிகரிக்க வேண்டும். இதனால் திறமையான ஊழியர்களுக்கு பதவி உயர்வுகளையும் மேலதிக கொடுப்பனவுகளையும் வழங்குவோம் என்றார். (க-9)







கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை முன்னிட்டு யாழ்.தமிழ் மிசன் சபையினால் நேற்றுமுன்தினம் நடாத்தப்பட்ட கிறிஸ்தவ பாதயாத்திரையின் போது எடுக்கப்பட்ட படங்கள்.
(படங்கள்: தீலிப்)

# வட-கிழக்கில் உள்ள கிராமிய வீதிகளை புனரமைக்க ஐரோ. ஒன்றியம் நிதியுதவி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண கிராமிய வீதிகளைப் புனரமைப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியம் 170கோடி ரூபா நிதியினை வழங்கவுள்ளது.

பெல்ஜியத்தில் இடம்பெற்ற ஆலோசனைக்கூட்டத்திலேயே இலங்கைக்கு இந்த நிதியை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டது.

இக்கூட்டத்தில் ஆயிரத்து 200 கோடி ரூபாவினை இலங்கைக்கு வழங்குவதற்கு இணங்கினாலும முதல் கட்டமாக 170 கோடி ரூபாவே கிடைக்கவுள்ளது என்று புனரமைப்பு மற்றும் மீள் குடியேற்ற அமைசசின் செயலாளா எம். எஸ் .ஜயசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள சீ மற்றும் டீ பிரிவைச் சேர்ந்த 550 கிலோ மீற்றா தூர வீதிகளை புனரமைப்பதற்காகவே இந்த தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

எவ்விதமான பராமரிப்போ, புனரமைப்போ இல்லாத இந்க வீதிகளை திருத்தியமைத்து மககளின் போக்குவரத்து வசதியினை மேம்படுத்தி பொருளாதார மற்றும் சமூக வாழ்க்கையினை உயர்த்துவதே இந்த வீதிகளை புனரமைப்பதற்கான பிரதான நோக்கமாகும்.

ஐரோப்பிய அமைப்பு ஏற்கனவே வழங்கிய நிதியைக் கொண்டு யுத்தத்தினால் குடியிருப்புகளை இழந்தவர்களுக்கு மீண்டும குடியிருப்புகளை அமைப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது. (க-9)

## இன்று ஒரு தகவல்

# சொல்பவர் சொன்னால்...

பிரான்சு நாட்டுச் சர்வாதிகாரியான நெப்போலியன் தன்னிகரில்லாத தலைவனாகப் பவனி வந்த காலம் அது. சூரிய அஸ்தமனம் என்பதே கிடையாது என்று சொல்லும் அளவுக்குப் பரந்து விரிந்து கிடந்த ஆங்கிலேய ஏகாதிபத்தியமே அவன் பெயரைக் கேட்டால் அஞ்சி நடுங்கியது. வாட்டர் லூ என்னுமிடத்தில் நடைபெற்ற இறுதிப் போரில் நெப்போலியன் தோற்கடிக்கப்படும் வரை அவன் புகழ் கொடி கட்டிப் பறந்தது.

பிரான்ஸ் நாட்டின் சர்வாதிகாரி நெப்போலியனுக்கும் ஆங்கிலேயருக்குமிடையில் கடும் போர் நடந்து கொண்டிருந்த காலம் அது. இரு பகுதிகளிலும் பல நூற்றுக் கணக்கான வீரர்கள் மடிந்து விழுந்த வண்ணமிருந்த அந்தக் காலகட்டத்தில் எப்படியோ போர் நிறுத்த உடன்படிக்கையொன்று ஏற்பட்டுப் போர் நிறுத்தம் ஏற்பட்டது. யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னரும் கூட நெப்போலியன் பிரான்ஸ் சிறைச்சாலையில் கைதிகளாக அடைத்து வைக்கப்பட்டிருந்த ஆங்கிலேய யுத்தக் கைதிகளை விடுதலை செய்யவில்லை.

தங்களை விடுதலை செய்யுமாறும்,சொந்த நாட்டுக்குச்செல்ல அனுமதிக்குமாறும் கைதிகள் விடுத்த கோரிக்கைகள் எதையும் நெப்போலியன் கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. சிறைக் கைதிகளின் மனைவிமார்களும் பிள்ளைகளும் எழுதிய கண்ணீர்க்கடிதங்கள் கூட அவனது கல்மனதைக் கரைக்கவில்லை.

இந்த நிலையில், ஆங்கிலக் கைதிகளையெல்லாம் அருள் கூர்ந்து விடுதலை செய்யுங்கள் எனக் கேட்டு தனிமனிதர் ஒருவர் எழுதிய கடிதமொன்று நெப்போலியனின் மனைவியான ஜோசப்பைன் கைக்கெட்டியது. கடிதத்தை எழுதியவரின் பெயரைப் பார்த்த மாத்திரத்தே ஜோசப்பைனின் கண்கள் கலங்கின.

கணவன் என்ன சொல்வாரோ என்ற பயத்துடன் அக்கடிதத்தை நெப்போலியனிடம் நீட்டினாள் ஜோசப்பைன். ஆங்கிலக் கைதிகளை விடுவிக்குமாறு மேலுமொரு கடிதமா என ஏளனமாகக் கேட்டபடியே கடிதத்தில் கண்களை ஓடவிட்ட நெப்போலியன் திடுக்கிட்டான். அவரா எழுதியிருக்கிறார்?... அவரா கேட்டிருக்கிறார் என அவனது வாய் முணுமுணுத்தது.

எதற்கும் அஞ்சா நெஞ்சம் கொண்ட நெப்போலியனையே திடுக்கிட வைத்த அக்கடிதத்தை எழுதியவர் யார்? பயங்கரவாதியாக வர்ணிக்கப்பட்ட நெப்போலியனது நெஞ்சை உலுக்கிய கடிதத்தை எழுதியவர் சாதாரண மனிதர்அல்லர். எந்த மருந்தினாலும் குணமாக்க முடியாத கொடிய நோய் எனக் கருதப்பட்ட அம்மை நோய்க்கு மருந்தைக் கண்டு பிடித்தவரான டாக்டர் எட்வேட் ஜென்னர்தான் அவர்.

ஜென்னரின் கடிதம் கிடைத்த மறுகணமே எந்தவிதமான நிபந்தனையுமின்றி அத்தனை ஆங்கிலேயக் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டனர்.

போரிலே அடிக்கடி ஈடுபட்டுக் கல்லாகப் போயிருந்த மாவீரன் நெப்போலியனது கல் நெஞ்சையே கரைத்திருக்கிறது. ஒரு சாதாரண மருத்துவரின் கடிதம் என்றால், அவன் அவர் மீது எத்தனை பெருமதிப்பு வைத்திருக்க வேண்டும்?

இதனைக் கேட்டுக் கொண்டிருந்த அன்பரொருவர் எமது தொழிற்சாலைகளிலும் தொழிலாளர்கள் மீது கொஞ்சமும் இரக்கம் காட்டாது வேலை வாங்கும் முதலாளிகளது கடும்போக்கை சமாளிப்பது எப்படி என்று கேட்டதற்குப் பக்கத்திலிருந்த ஒருவன் இப்படிப் பதில் கூறினாராம்.

அதாவது முதலாளி வீட்டில் இல்லாத சமயத்தில் அவரது மனைவியிடம் சென்று முறையிடுங்கள். எல்லாம் சரியாக நடக்கும் என்றாராம். தலையணை மந்திரத்துக்கு மசியாதவர்கள் எவருமே இருக்க முடியாது. தொழிலாளர்களது வேண்டுகோள்களுக்குப் பணியாதவர் தலையணை மந்திரத்துக்கு பணியாமல் இருக்க முடியாது என்றாராம் அவர்.

இதே போல ஆறெழுத்து மந்திரம் செய்யாத வேலையை ஐந்தெழுத்து மந்திரம் சுலபமாகச் செய்து விடும் என்பார்கள்.

புதிதாகத் திருமணமான ஒருவன் மனைவியுடன் ஒத்துப் போக முடியாத நிலையில் தனது குருவிடம் சென்று முறையிட்டானாம். குரு அவருக்கு ஆறெழுத்து மந்திர மொன்றை உபதேசித்து அதன்படி நடந்து பார்க்கும்படி புத்திமதி கூறி அனுப்பிவைத்தாராம். சென்ற சீடன் அடுத்த கணமே ஓடோடி வந்து குருவே ஆறெழுத்து மந்திரத்தை ஓதியதுமே நிலைமை மோசமாகிவிட்டது; என் செய்வேன் என்று முறையிட்டனாம்.

அதைக்கேட்ட குரு இம்முறை ஐந்தெழுத்து மந்திர மொன்றை உபதேசிக்கிறேன்; அதை அனுஷ்டித்துப் பார் எனக்கூறி ஐந்தெழுத்து மந்திரத்தை உபதேசித்தாராம்.

வீடு சென்ற சீடன் மறுகணம் திரும்பி வந்து குருவே உங்கள் ஐந்தெழுத்து மந்திரத்தின் மகிமையே மகிமை. இதை முன்னரே, உபதேசித்திருந்தால் வாழ்க்கை எப்படி இருந்திருக்கு மென்றனாம்.

**அந்த மந்திரங்கள் என்ன தெரியுமா?**

**'அடக்கி பார்' இது ஆறெழுத்து மந்திரம்.**

**'அடங்கி போ' இது ஐந்தெழுத்து மந்திரம்.**

நீங்களும் இந்த ஐந்தெழுத்து மந்திரத்தைக் கடைப் பிடித்து குடும்பப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாமே.

***நீர்வை மணி***

# சுனாமி பேரலையை சமாதானத்துக்கு சாதகமாக அரசு பயன்படுத்தவில்லை

## தமிழ்ச்செல்வன் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

சுனாமி ஆழிப்பேரலை உருவாக்கிய சந்தர்ப்பத்தைச் சமாதான முன்னெடுப்புகளுக்குச் சாதகமாக இலங்கை அரசு பயன்படுத்தவில்லை.இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

ஐரோப்பா சென்றிருக்கும் தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் ஒஸ்திரியாவில் வியன்னா அமைச்சரவை வளாகத்தில் ஒஸ்திரிய வெளிநாட்டலுவல்களிற்கான சமஸ்டி அமைச்சக மனிதநேய உதவிகள் திணைக்களத் தலைவர் தலைமையிலான குழுவினரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

ஆழிப்பேரலை இணைந்த செயற்திட்டம், சமாதான முன்னெடுப்புக்களின் முன்னேற்றம் என்பவற்றின் தேக்க நிலை குறித்து உதவி வழங்கும் நாடுகளின் கவலை தொடர்பாக இச் சந்திப்புகளின் போது ஒஸ்திரியத் தரப்பில் வினா எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த தமிழ்ச்செல்வன், நேர்மையுடன் போர்நிறுத்த உடன்படிக்கையை பேணுவது விடுதலைப் புலிகளின் பொறுப்பு என்றும் இணைந்த செயற் திட்டத்திற்கான விடுதலைப்புலிகளின் விட்டுக்கொடுப்புகள் பற்றியும் எடுத்துக் கூறினார்.

அத்துடன், உதவி வழங்கு வோரின் விரக்தி நிலைக்கு ஏதுவாக இருக்கிற ஒரு பயனற்ற சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து மக்கள் மத்தியில் நம்பிக்கை குறைவடைந்துள்ளது. இந்த நம்பிக்கையின்மை நிலைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முகம் கொடுக்க வேண்டியுள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

ஆழிப்பேரலையால் கிடைத்த சந்தர்ப்பத்தை ஒரு அரசியல் தீர்வுக்கான சந்தர்ப்பமாக கொழும்பின் அதிகார மையம் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்றும் தமிழ்ச்செல்வன் இச்சந்திப்பில் சுட்டிக்காட்டினார்.(இ)

# கியூபா மீதான பொருளாதாரத் தடை எதிர்ப்பது யாரை? ஜே.வி.பி தடுமாற்றம்

(கொழும்பு)

இலங்கைத் தீவகத்தில் சமாதான முன்னெடுப்புகளுக்கு முட்டுக்கட்டை போட்டுக்கொண்டு பேரினவாத வெறிகொண்டு அலையும் ஜே.விபி கட்சி, கியூபா நாட்டின் மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடையை இலங்கை அரசு எதிர்க்க வேண்டும் என்று கூப்பாடுபோடு கிறது.

நாடாளுமன்றத்தில் ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்சா பேசுகையில் கியூபா மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடையை எதிர்க்கவேண்டுமென்று தெரிவித்தார்.

மூன்றாம் உலக நாடுகளின் சார்பாக அமெரிக்காவுக்கு எதிராக கியூபா போராடி வருவதாக குறிப்பிட வீரவன்ச, இலங்கை அரசு எதிர்க்கப் போவது அமெரிக்காவை அல்ல- நீதியின் பக்கம்தான் நிற்கப் போகிறது என்றும் தத்துவ முத்தை உதிர்த்து விட்டிருக்கிறார்.

இலங்கைத் தீவகத்தில் அமெரிக்கப் போர்க் கப்பல்கள் ஆழிப்பேரலையைக் காரணம் காட்டி குவிக்கப்பட்ட போது சிவப்புக் கம்பளம் விரித்த சிங்களச் சிவப்புச் சிந்தனைக் கும்பலும் இவர்கள்தான் என்பதையும் யாரும் மறக்கப்போவதில்லை. (க)

# பொதுக் கட்டமைப்பால் தமிழ் மக்களுக்கு ஆபத்து!

## நீலிக் கண்ணீர் வடிக்கிறது ஹெல உறுமய

(கொழும்பு)

அரசும், புலிகளும் இணைந்து வடக்கு, கிழக்கு பகுதிகளில் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதானது வடக்கு-கிழக்கு மக்களை அடிமைப்படுத்தி புலிகளிடம் கையளிக்கும் செயலாகவே அமையும் என ஹெல உறுமய கட்சியின் பாராளுமன்றக் குழுத்தலைவர் வண அத்துரலியரத்னதேரர் தெரிவித்துள்ளார். அரசுக்கும் புலிகளுக்குமிடையே ஏற்படவுள்ள உத்தேச பொதுக் கட்டமைப்புக் குறித்துச் சபைக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார். கடந்த புதன்கிழமை நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டத்தில் சபாநாயகரின் அனுமதியுடன் ரத்னதேரர் முன் வைத்த கவன ஈர்ப்புப் பிரேரணையின் மீது பேசும் பொழுதே அவர் இவ் வேண்டுகோளை விடுத்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், சுனாமியினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு பிரதேசத்தின் நிவாரண புனரமைப்புப் பணிகளை அரசும் புலிகளும் இணைந்து பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தவிருப்பதாக அறிய முடிகின்றது. இக்கட்டமைப்பு தொடர்பான பேச்சுக்கள் சாதகமான முறையில் இடம்பெற்று வருவதாகவும் தெரியவருகின்றது. இதன் உண்மை நிலை என்ன?

பொதுக்கட்டமைப்பு எந்த அடிப்படையிலானது? இவ்வாறான பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுமாயின் இது பற்றி சபைக்கு அறிவிக்கப்படுமா? இவை குறித்து அரசாங்கம் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வேண்டும்.

வடக்கு-கிழக்கில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களும், புலிகள் கட்டுப்பாட்டு பிரதேசங்களும் உள்ளன. இப் பிரதேசங்களுக்கென பொதுவான கட்டமைப்பை ஏற்படுத்துவது பொருத்தமற்றது. அவ்வாறு செய்வதானது முழு வடக்கு-கிழக்கு மக் களையும் அடிமைப்படுத்தி புலிகளிடம் கையளிக்கும் நடவடிக்கையாகவே அமையும் எனஅவர் மேலும் தெரிவித்தார். (க-9)

# உரிமைக்காக போராடியவர்கள் இன்று உணவுக்காகவும் போராடுகின்றார்கள்

## வவு.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் கவலை

(கொழும்பு)

இலங்கை அரசிடம் போர்காலத்திலும் போராடித்தான் தமிழர் உரிமைகளைப் பெறவேண்டியிருந்தது.

தற்போது சமாதான காலத்திலும் கூட போராடித்தான் நிவாரணங்களைப் பெறவேண்டிய நிலை காணப்படுகின்றதென வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் கவலை தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வவுனியா உள்ளூராட்சி ஆணையாளர் காரியாலயத்தில் நடைபெற்ற வடக்கு-கிழக்கு பெருந்தோட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான மன்ற அங்குரார்ப்பண நிகழ்விலேயே அவர் இக் கருத்தைத் தெரிவித்தார். முதல் முறையாக வடக்கு-கிழக்கு மலையகத் தமிழர்களை உள்ளடக்கி தொழிற்சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்விற்கு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர், சதாசிவம் கனகரட்ணம் போன்றோரும் மற்றும் வவுனியா பிரதேச செயலாளர் சுகந்தி துரைசாமி உட்பட சமுர்த்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (க-7)

# புதுவையின் கவிதை நூல் வெளியீட்டு விழா லண்டனில்

(லண்டன்)

தமிழீழ விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 'பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்' என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை திங்கட் கிழமை லண்டனில் நடைபெறவுள்ளது.

லண்டன் ரூற்றிங் முத்துமாரி அம்மன் கோயில் சிவயோக மண்டபத்தில் சட்டத்தரணி ந.சிறீக்கந்தராசா தலைமையில் இடம்பெறும்.

வைத்திய கலாநிதி திருமதி ஆனந்தி கருணைலிங்கம் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார்.

இதில் அ.நா. சோமஸ்கந்தசர்மா, ச.ஸ்ரீரங்கன் ஆகியோர் வாழ்த்துரையும் விரிவுரையாளர் ஆயோ.பற்றிமாகரன் சிறப்புரையையும் ஊடகவியலாளர் பொ.ஐங்கரநேசன் வெளியீட்டுரையையும் பி.பி.ஸி.தமிழோசையின் திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசம், ஊடகவியலாளர் ஒ.சி.தாசீசியஸ். எஸ்.கருணாநந்தராசா ஆகியோர் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்துவர். (க)

# ஆளுநர் டிரோன் மூதூர் சென்றார்

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ நேற்று முன்தினம் மூதூருக்கு விஜயம் செய்தார்.அங்கு சென்ற ஆளுநர் மூதூர் அரபிக் கல்லூரியில் நடைபெற்ற அபிவிருத்தி தொடர்பான மாநாட்டில் கலந்து கொண்டார்.பின்னர் மூதூர் வைத்தியசாலைக்குச் சென்று அம்புலன்ஸ் படகு ஒன்றினை மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரிடம் கையளித்தார்.

பின்னர் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குச் சென்று பார்வையிட்டதுடன் இடைத்தங்கல் முகாமிலிருந்தவர்களுடனும் கலந்துரையாடினார்.

மாகாண நிர்வாகம் அமுலுக்கு வந்த பின்னர் மூதூருக்கு விஜயம் செய்த முதலாவது ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# அரசு பொதுக் கட்டமைப்பு பற்றி பேசுவது சர்வதேச நாடுகளை ஏமாற்றுவதற்காகவே!

## த.தே.கூட்டமைப்பு எம்.பிக்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துவதில் அரசாங்கத்தின் இணக்கப்பாட்டை நோர்வே உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் வரை அரசாங்கம் வெறுமனே கூறி வரும் இணக்கப்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.**



சர்வதேச நாடுகளை ஏமாற்றுவதற்காகவே அரசாங்கம் அவ்வாறு கூறுவதாகவும் கூட்டமைப்பு குற்றம் சாட்டியுள்ளது. பொதுக் கட்டமைப்பு விரைவில் உருவாகும் என வெளியுறவு அமைச்சர லக்ஷ்மன் கதிர்காமர் லண்டனில் கருத்து வெளியிட்டமை தொடர்பாக கேட்டபோதே கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கூட்டமைப்பின சிரேஷ்ட எம்.பி. ஜோசப்பரராஜசிங்கம தெரிவிக்கையில், சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணத்தின் கரையோரப் பிரதேசங்களை புனரமைப்பு செய்வதற்கு பொதுக் கட்டமைப்பு அவசியம் என்பதை சர்வதேச நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன.

அத்துடன், புலிகளுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்தியே அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியும் எனவும் சர்வதேச நாடுகள் கருதுகின்றன. ஆகவே, இந்த யதார்த்தத்தை மறுக்க முடியாத சூழ்நிலை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது. உண்மையில் அவ்வாறான நோக்கம் இருந்தால் நோர்வே மூலமாக அரசாங்கம் பொதுக் கட்டமைப்பு பற்றிய அறிவிப்பை உத்தியோகபூர்வமாக வெளியிடவேண்டும்.

அதனைவிடுத்து பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்த இணக்கம் என லண்டனில் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறுவதும், வெளிநாட்டு பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி அதனை வலியுறுத்துவதும் ஏற்புடையதல்ல.

கடந்த இரு மாதங்களரக பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துவதில் அரசாங்கம் உடன்பாட்டைத் தெரிவித்து வருகின்றது. ஆனால், நடைமுறையில் அது சாத்தியப்படவில்லை.

ஜனாதிபதி சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி தனது அரசியல் வாழ்க்கையை நீடிப்பதில் தான் கவனமாக இருக்க கட்டமைப்பு தொடர்பாக அவரது அரசாங்கத்திற்குள்ளேயே நாளுக்கு நாள் எதிர்ப்புகள் அதிகரித்து வருகின்றன.

இந்த நிலையில் பொதுக் கட்டமைப்பு அமையும் என நாங்கள் எதிரபார்க்க முடியாது எனறார்.

கூட்டமைப்பின் இணைப்பாளரும் யாழ். மாவட்ட எம்.பி.யுமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில்,

பொதுக் கட்டமைப்பை அமைக்க அரசாங்கம் இணக்கம் என ஏற்பாட்டாளரான நோர்வே உத்தியோகபூர்வமாக புலிகளிடம் தெரிவிக்கும் வரை, அமைச்சர் லக்ஷமன் கதிர்காமர் லண்டனில் தெரிவித்த அந்த இணக்கப்பாட்டை எங்களால் நம்ப முடியாது.

பொதுக் கட்டமைப்பு அமைக்க இணக்கம் என்பதை ஜனாதிபதி நோர்வேக்கு உத்தியோகபூர



வமாக அறிவித்துள்ளாரா? அதற்காக நோர்வே தயாரித்த அந்த ஆலோசனையை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளாரா? என்ற விடயங்களை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

சர்வதேச நாடுகளை சமாளிப்பதற்காக வெறுமனே இணக்கம் என்று ஊடகங்களுக்கு கருத்துக கூறுவதை நாங்கள் எப்படி நம்புவது என்றும் கேள்வி எழுப்பினார். (க)

## இராசி பலன்

**27.03.2005**
**பங்குனி 14, ஞாயிற்றுக்கிழமை**
**துதியை பின்னிரவு 2.53 மணிவரை**
**சித்திரை பின்னிரவு 1.30 மணிவரை**
**இராகுகாலம் 4.44 - 6.14 மணிவரை**
**சுபநேரம் 9.14 - 10.44 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | எடுத்த கருமங்கள் கைகூடும், தெய்வ சிந்தை, குடும்ப மகிழ்ச்சி, உடல் நலம். |
| இடபம் | மனமகிழ்ச்சி, சத்துருஜெயம், தடைப் பட்ட காரியம் கைகூடும், உறவினர் உதவி, |
| மிதுனம் | வியாபார சிந்தை, புத்திரரால் கவலை, முயற்சி தாமதம், சிறுவியாதி. |
| கடகம் | உடல் நலக்குறைவு, மனக்கிலேசம், இடமாற்றம், முயற்சி தாமதம். |
| சிங்கம் | பிரயாண நன்மை, வாக்கு மேன்மை, புதிய சிந்தை, போசன சுகம். |
| கன்னி | காரிய தாமதம், பணவிரயம், ரோக நிலை, கடின வார்த்தை. |
| துலாம் | தெய்வ சிந்தை, சயன சுகம், புதிய தகவல், நல்ல முயற்சி. |
| விருச்சிகம் | கோபப்படுதல், சுப செலவு, சயன சுகக் குறைவு, காரிய தாமதம். |
| தனுசு | காரிய சித்தி, புகழ், தனலாபம், குடும்ப மகிழ்ச்சி. |
| மகரம் | தொழில் சிந்தை, நிலைமாற்றம், அதிகாரம், நண்பர்கள் உதவி. |
| கும்பம் | பித்த ரோகம், கட்டுப்பாடு, பிரயாணம், காரிய தாமதம். |
| மீனம் | பிரயாண பயம், திடீர் நன்மை, உஷ்ண வியாதி, முயற்சி தாமதம். |

**பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது**

**–வளவன்**

## இஸ்லாமிய அறிஞர் நாடுகடத்தல்; அம்பாறை மக்கள் ஆர்ப்பாட்டம் !

தமிழ்நாட்டைச் சேர்ந்த இஸ்லாமிய மார்க்க அறிஞர் பி.ஜெய்னுலாப்டீன் இலங்கையிலிருந்து நாடு கடத்தப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்து நேற்று முன்தினம் அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

கல்முனைக்குடி முஸ்லிம் மக்கள் அமைப்பு என்ற பெயரில் அன்சார் சுன்னத்துல் முகமதியா ஜும்மா பள்ளிவாசல் முன்பாகவும் நிந்தவூர் ஜாமிஉத் தவ்ஹத் பள்ளிவாசல் முன்பாக குறிப்பிட்ட பள்ளி வாசல் நிர்வாகத்தின ஏற்பாட்டிலும் இந்த ஆர்ப் பாடடங்கள் நடைபெற்றுள்ளன. நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நண்பகல் ஜும் ஆத்தொழுகையின் பின்பு குறிப்பிட்ட பள்ளிவாசல்கள் முன்பாக கூடிய ஆயிரத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மதச் சுதந்திரத்தையும், கருத்துச் சுதந்திரத்தையும் மனித உரிமையையும் உதாசீனம் செய்யும் நடவடிக்கை இது என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

நிநதவூர் ஜாமிஉத் தவ்ஹத் பள்ளிவாசல் தலைவர் எம.எச்.மொகமது இத்ரீஸ் இது தொடர்பாக ஜனாதிபதி சநதிரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், மதச் சுதந்திரத்தையும் கருத்து சுதந்திரத்தையும் மனித உரிமையையும் மீறும் இந்த செயலானது இலங்கை அரசாங்கம் இரு நாட்டு முஸ்லிம்களையும் அவமானப்படுத்தும் செயலாகும்.

இந் நிலையில் அரசாங்கம் இரு நாட்டு முஸ்லிமகளிடமும் மன்னிப்புக் கோர வேண்டும். நாடு கடத்தப்பட்ட அறிஞரை மீண்டும் இலங்கைக்கு வர ஆவண செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.(க)

## கிளி. மாவட்டத்தில் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் நோயாளர்கள் தொகை திடீரென அதிகரித்துள்ளது.

தற்போது நிலவும் வெப்பத்துடன் கூடிய காலநிலை காரணமாகவும் காற்று மூலம் பரவும் சுவாசத் தொற்று நோய்கள் காரணமாகவும் நாள்தோறும் 600 வரையான நோயாளர்கள் வெளி நோயாளர் பரிவில் சிகிச்சை பெற்று செல்கின்றனர். அத்துடன் உள்ளக விடுதியல் 150 வரையான நோயாளர்கள் இட நெருக்கடிக்கு மத்தியிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்படும் நோயாளர் தொகை அதிகரித்துள்ளது. கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் நோயாளர் வண்டி (அம்புலன்ஸ்) நான்கு முறை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு நோயாளர்களை கொண்டு செல்வதையும் காண முடிகிறது. (க)

## சமுர்த்திப் பயனாளிகளுக்கும் விரைவில் தொழிற் பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட சமுர்ததி நிவாரணம் பெறும் குடும்பங்களின் பயனாளிகளுக்கும் சமுர்த்தி அதிகாரசபை தொழிற் பயிற்சிகளை வழங்கவுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இவர்களுக்கு மேசன் வேலை, தச்சுவேலை, குழாய் பொருத்துதல், மின் இணைப்பு ஆகிய துறைகளில் இவர்களுக்கு பயிற்சி வழங்கப்படும்

பயிற்சிக் காலத்தில் நாளொன்றுக்கு 150 ரூபா வழங்கப்படும் அடுத்தமாதம் தொடக்கம் இப் பயிற்சிகள் சகல மட்டங்களிலும் நடாத்தப்படவுள்ளதாக சமுர்த்தி அதிகாரசபை வெளியிட்டுள்ள சுற்றுநிருபம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க.7)






குருநகர் யாகப்பர் ஆலயத்தில் திருப்பாடுகளின் நினைவுகளை முன்னிட்டு நேற்றுமுன்தினம் பெரிய வெள்ளி அன்று காண்பிக்கப்பட்ட இயேசுவின் மரித்த நிகழ்வுகள். (படங்கள் :நோயல்)

# பாகிஸ்தானுக்கு அமெரிக்க போர் விமானம் இந்தியப் பிரதமர் கடும் கண்டனம்

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா போா விமானம் சப்ளை செய்வதை மன்மோகன்சிங்குடன் அமெரிக்க ஜனாதிபதி புஷ் தொலை பேசியில் பேசும் போது இந்தியாவின் கண்டனத்தை பிரதமர் தெரிவித்தார்.

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் நேற்று முன்தினம் மாலை 4.15மணியளவில் பிரதமர் மன்மோகன்சிங்குடன் தொலைபேசியில் பேசினார். சுமார் 15 நிமிட நேரம் அவர்கள் பேசினார்கள். அப்போது பாகிஸ்தானுக்கு அமெரிக்கா நவீன எப்-16 போர் விமானம் விற்க முடிவு செய்திருக்கும் தகவலை மன்மோகன் சிங்குக்கு புஷ் தெரியப்படுத்தினார். அதைக்கேட்டு மன்மோகன் சிங் அதிருப்தி அடைந்தார்.

அமெரிக்காவின் இந்த முடிவு இந்தியாவுக்கு பெரிய ஏமாற்றத்தை அளிக்கிறது. நவீன எப்-16 போர் விமானங்களை அமெரிக்கா பாகிஸ்தானுக்கு விற்பதால் தெற்காசிய பிராந்தியத்தின் பாதுகாப்பு சூழ்நிலைக்கு பெரும் பாதிப்பு ஏற்படும். எதிர்மறையான விளைவுகள் உருவாகும் என மன்மோகன்சிங் கவலை தெரிவித்தார்.

டில்லியில் பிரதமர் அலுவலகச் செய்தித் தொடர்பாளர் சஞ்சயாபாரு நேற்று முன்தினம் நிருபர்களிடம் இந்தத் தகவல்களை தெரியப்படுத்தியுள்ளார். அமெரிக்கா பாகிஸ்தானுக்கு சப்ளை செய்ய இருக்கும் எப்-16 போர் விமானங்கள் அணுகுண்டுகளை ஏந்திச் செல்லக் கூடிய நவீன விமானங்கள் ஆகும். அதிக உயரத்தில் மிகத் துரிதமாகவும் லாவகமாகவும் அவை பறக்கக்கூடியவை. மின்னல் வேகத்தில் திரும்பக்கூடியவை. பாகிஸ்தான் இது போன்ற நவீன எப்-16 போர் விமானங்களைப் பெற்றால் தெற்காசியா பகுதி நாடுகளின் ஆயுதபலத்தில் பெரும் ஏற்றத்தாழ்வு ஏற்படும்.

இதனால் இந்தப் பகுதியில் பதற்றம் ஏற்படவும் வாய்ப்புள்ளது. எனவே பாகிஸ்தானுக்கு அமெரிக்கா நவீன எப்-16 விமானங்களை விற்க இந்தியா எதிர்ப்புத் தெரிவித்துவந்தது.

கடந்த மார்ச் 16ஆம் திகதி அமெரிக்க வெளியுறவுத்துறை மந்திரி கொணடாலிசாரைஸ் இந்தியா சென்றபோது இந்திய வெளியிறவுத்துறை அமைச்சர் கே. நட்வர்சிங் இதுகுறித்து கவலை தெரிவித்திருந்தார். பாகிஸ்தானுக்கு அமெரிக்கா எப்-16போர் விமானங்களை விற்கக் கூடாது என்று அவர் கூறியிருந்தார். அப்போது ரைஸ் இது குறித்து இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை என்ற கூறிச்சமாளித்தார். பின்னர் பாகிஸ்தானுக்கு சென்ற ரைஸ் அங்கு பாக். தலைவர்களுடன் பேச்சு நடத்தி எப்-16போர் விமானம் விற்கமுடிவு செய்து விட்டு அமெரிக்க திரும்பியிருக்கிறார்.

இதையடுத்து இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி தற்போது பாகிஸ்தானுக்கு நவீன போர் விமானம் சப்ளை செய்ய அமெரிக்கா முடிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தானில் பின்லேடன் தலைமையிலான அல்-கெய்டா தீவிரவாதிகளுடன் அமெரிக்கா போர் செய்து வருகிறது. இதற்கு பாக். அதிபர் முஷாரப் துணைபுரிந்து வருகிறார். அவரது விசுவாசத்துக்கு பதில் நன்றி தெரிவிக்கும் எண்ணத்தில் அமெரிக்கா இப்படி எப்-16 போர் விமானத்தை அந்த நாட்டுக்குதர முடிவு செய்திருப்பதாக தெரிகிறது. பயங்கர வாதத்திற்கு எதிரான போரில் பாகிஸ்தான் ஈடுபட எப் 16 போர் விமானம் உதவும் என்று அமெரிக்காகருதுகிறது. இந்த நிலையில் பாகிஸ்தானுக்கு எப்-16 விமானம் சப்ளை செய்வதை அமெரிக்க செனட் உறுப்பினர் லாரிபிரஸ்லர் எதிர்த்துள்ளார். எப்-16போர் விமானம் அணு குண்டுகளை சுமந்து செல்லக்கூடிய விமானம். பயங்கர வாதத்தை ஒழிப்பதற்கும் அந்த விமானத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்ற அவர் கூறியிருக்கிறார். (து)



புனித வெள்ளியையொட்டி பிலிப்பைன்ஸ் நாட்டில் செயின்ட் லூசியா பகுதியில் மேரிஜானி என்ற பெண் சிலுவையில் அறைந்து கொண்டு பிரார்த்தனையை நிறைவேற்றுகிறார்.






பெங்களூரில் உள்ள பார்வையற்ற சிறுவர்களுக் கான பள்ளியில் நடைபெற்ற ஹோலி கொண்டாட்டத்தில் சிறுவர் சிறுமிகள் வண்ணப் பொடிகளைத் தூவி மகிழும் காட்சி. அவர்களால் வண்ணத்தைக் காண இயலாவிட்டாலும் அவாகளது உள்ளத்தின் எண்ணத தைக காணமுடிகிறது.

# அந்தமானில் நிலநடுக்கம்

அந்தமான், நிகோபார் தீவுகளில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்பட்டு வருகிறது.

தெற்கு நிகோபார் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 6.35 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டதாக வானிலை மையம் அறிவித்துள்ளது, ரிக்டர் அளவில் 6.4 ஆக இருந்தது என்றும் கூறப்பட்டுள்ளது. வடக்கு அடசரேகையில் 6.5 பாகைககும், கிழக்குதீக்க ரேகையில் 93.9 பாகைககும் இடையே நிலநடுக்கத்தின மையம் இருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்டுள்ள சேதம் குறித்து தகவல் இல்லை. (து)

# ஈராக்கில் தொடரும் வன்முறை கார்க் குண்டு வெடித்து 11 பேர் பலி

பாக்தாத்தில் கார்க் குண்டு வெடித்து ஈராக் பொலிஸார் 11பேர் உடல்சிதறிப் பலியாயினர். மற்றும் 14பேர் படுகாயமடைந்தனர்.

ஈராக் தலைநகர் பாக்தாத்தின் மேற்கே அமைந்துள்ளது ரமடி. இங்கு சன்னி முஸ்லிம்கள் அதிகளவு வாழ்ந்து வருகின்றனர். இந்த நகரத்தின் மையப் பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனங்களின் மையப்பகுதியில் திடீரெனகுண்டு வெடித்தது. இந்தக் குண்டு வெடிப்பு கடந்த வியாழக்கிழமை நடந்தது.

இந்த குண்டு வெடிப்பு மூலம் ஒன்பது ஈராக்கிய பாதுகாப்பு படை வீரர்கள் காயமடைந்தனர். மேலும் 3 சிவிலியன்களும் காயமடைந்தனர். குண்டு வெடிப்பில் குண்டு வெடிப்பு நடத்திய தீவரவாதிகளும் கொல்லப்பட்டனர். காயமடைந்தவர்கள் அருகிலுள்ள மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

பாக்தாத் நகரின் கிழக்குப் பகுதியில் அமெரிக்க படைவீரர்களுக்கு மொழிபெயர்ப்பு பணி செய்துவருகின்ற 9பேரை அடையாளம் தெரியாத மர்மநபர்கள் சிலர் சுட்டுக்கொன்றனர். மொழிபெயர்ப்பு பணியாளர்கள் வேலை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த போது இரண்டுகார்களில் பின் தொடர்ந்து வந்த சிலர் அவர்கள் மீது எந்திர துப்பாக்கியால் சரமாரியாகச்சுட்டனர். இதில் ஐந்து பெண்கள் அதே இடத்தில் துடிதுடித்து இறந்தனர்.

மற்றொரு சம்பவத்தில் பாக்தாத்தின வடக்கே உள்ள இராணுவ முகாம் அருகே சுட்டுக் கொல்லப்பட்ட இரண்டு உடல்களை ஈராக்பொலிசார் கைப்பற்றி உள்ளனர். அபுகிரேப் நகரைப் பாக்தாத்துடன்இணைக்கும் சாலையில் இந்த இரண்டு உடல்களும் கண்டுபிடிக்கப்பட்டன. அங்கு பொலிஸார் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மற்றொரு கார்க் குண்டுவெடிப்பு சம்பவத்தில் 4 ஈராக்கிய பாதுகாப்பு படையினர் பலியாகியுள்ளனர்.

பாக்தாத்தின் சுற்றுப்புறத்தில் உள்ள கிராமப் பகுதிகளில் பதுங்கிக்கொண்டு அவ்வப்போது தீவிரவாதிகள் கார்க் குண்டு வெடிப்பு, வெடி குண்டு வீச்சு, கண்ணிவெடித் தாக்குதல் ஆகிய சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தச் சம்பவத்தால் அமெரிக்க கூட்டுப்படை மற்றும் ஈராக்கிய பாதுகாப் -புப்படையினர் கடும் சவாலை சந்தித்து வருகின்றனர். அவ்வப்போது தீவிரவாதிகளைத் தேடி வேட்டையாடியபோதிலும் தீவிரவாதிகள் தாக்குதலை முற்றிலும் நிறுத்த முடியவில்லை. (து)

# 3நாள் தூங்காமல் டிரக் ஓட்டிய டிறைவர் கைது

மூன்று நாள் தூங்காமல் டிறக் ஓட்டிய டிறைவர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார் ஜேர்மனி நாட்டில் இருந்து சுவிஸ்சர்லாந்து நாட்டுக்கு ஒரு டிறைவர் டிரக்கில் சரக்கேற்றிச் சென்றார்.

இவர் தொடர்ச்சியாக மூன்று நாள் தூங்காமல் டிரக் ஓட்டிச்சென்றுள்ளார். இந்நிலையில் இவர் சுவிஸ்சர்லாந்து நாட்டு எல்லைக்குள் சென்றதும் அந்நாட்டுப் பொலிஸார் அவரைக்கைது செய்தனர்.

சுவிஸ்சர்லாந்து நாட்டுச்சட்டப்படி ஒரு டிறைவர் தினந்தோறும் 11மணி நேரம் ஓய்வெடுத்துக் கொள்ளவேண்டும் இதை மீறும் டிறைவர்கள் கைது செய்யப்படுவர். (து)



பாகிஸ்தானின் தேசிய தினப் பேரணி நேற்று முன்தினம் இஸ்லாமாபாத்தில் நடைபெற்றது. விழாவிற்கு ஆப்கானிஸ்தான் பிரதமர் ஹமீட் கர்சாய் சிறப்பு விருந்தினராக வந்திருந்தார். விழாவில் பாக். வீரர்கள் நடத்திய விமான சாகசத்தை பார்த்து மகிழும் பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப், ஹமீட் கர்சாய் மற்றும் பாக். பிரதமர் சௌகட் ஆசிஸ் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்

# படகு கவிழ்ந்து 30 பேர் பலி

பாகிஸ்தானின் இன்டுஸ் ஆற்றில் படகு கவிழ்ந்து 30பேர் தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தனர். மத்திய பாகிஸ்தானில் செச்னா ஷெரீப் நகரில் நேற்றுமுன் தினம் மாலை இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

அந்தப் படகு பாலம் ஒனறின் மீது மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாகவும், உயிரிழந்தவர்களில் ஒரு பெண்ணின் உடல் மட்டுமே மீட்கப்பட்டிருப்பதாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர். மற்ற 29பேரின் உடல்களும் இன்னமும் கிடைக்கவில்லை.

முஸ்லிம் புனித தலத்திற்கு சென்றுவிட்டு சுமார் 40பேர் படகில் திரும்பிக் கொண்டிருந்தபோது இந்த விபத்து நேரிட்டுள்ளது. (து)



# அருட்கவி கலாநிதி சீ.வி...

# "தெய்வீக அருட்புகழ்" வெளியீட்டு ...

## ஆக்கியோன் உரை

அன்புவளர் மெய்யன்பர்களே!

இறைவியின் திருவருள் – எனது 14 வயதிலே கிடைத்தது. நாவிலே தனது சூலத்தால் ஏதோ எழுதித் திருநீறிட்டதாகக் கண்ட கனவின்பின், நினைத்தவுடன் பாடல்களை இலக்கண வழுவில்லாமல் பாடும் பாக்கியம் பெற்றேன்.

இக்காரணங்களால் 150க்கும் மேற்பட்ட கவிநூல்களை எழுதும் வாய்ப்புக் கிடைத்தது. திருவூஞ்சல், தோத்திரமாலை, அந்தாதி, கீர்த்தனங்கள், அருட்புகழ் இப்படிப் பல கவி நெறிகளைப் பிடித்துப் பாடும் தொண்டனானேன். பெருமாள் என்றால் பரம்பொருள் என்று பொருள். ஆகையால் அனைத்துத் தெய்வங்களையும் பரம்பொருளாகவே கருதி அருட்புகழில் பெருமாள் எனப் பாடியிருக்கின்றேன்.

1963இல் செல்வச்சந்நிதி முருகனை அருட்புகழால் பாடியதிலிருந்து மாவை, நல்லூர் இத்தலங்கள் முதலாய பல மூர்த்திகளை அருள்கொண்டு பாடினேன். பாடல்கள் அருணகிரி சுவாமிகளின் திருப்புகழ் போல அமைந்தாலும் எமது பாடலுக்குத் திருப்புகழ் என்று சொல்வதற்கு அணுவேனும் அருகதை கிடையாது. திருபபுகழ் என்ற அருணகிரியின் பாடலுக்குப் பெயரிட்டவர் ஸ்ரீ முருகப்பெருமானே.

யாம் எவ்வித பத்தியிற் பாடினாலும் அது உயர்தரத்திற்கு வராது. எனவே, தெய்வீக அருளால் பாடிய இப்பாடல்களுக்கு அருட்புகழ் என்று பெயரிட்டேன். பல அன்பர்களின் வேண்டுதற்படி பல தலங்களின் பாடல்களைத் தொகுத்து இந்நூலை வெளியிடுகின்றேன். இந்நூலைப் பிரசுரிப்பதற்கு முழுச்செலவையும் உதவிய திரு.நவ.பாலவிநாயகர் (ருவிங்கிள் ஸ்ரார்) அவர்களுக்கு எல்லாம் வல்ல பரம்பொருள் இஷ்டசித்திகளுடன் நீண்டகாலம் வாழ்வு கொடுக்கவேண்டுமென வாழ்த்தி நிறைந்த நன்றி கூறுகின்றேன். எம்மக்கள் பாடிப்பரவி பயன் பெறுவார்களாக.

அளவெட்டி, நாகேஸ்வரம்
ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானம்.

அன்பன்
சீ.விநாசித்தம்பி

## அருட்புகழ் நயப்புரை

"அரிது அரிது மானிடராதல் அரிது
கூன் குருடு செவிடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான் செய்தலரிது..."

என்னும் ஔவை வாக்கிற்கு இலக்கணமாகத் திகழும் மாண்புறும் மனிதர்கள் சிலரில் அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயாவும் ஒருவராக விளங்குகின்றார். அவரது பதினான்கு வயதிலே அம்பிகை ஆதிசக்தியின் திருவருளால் நினைத்த போது அருட்பாடல்களை இலக்கண வழுவில்லாமல் பாடும் அருள் பெற்றவராதலால் 150ற்கு மேற்பட்ட கவிதை நூல்களை எழுதிப் புகழ்பெற்றார். அவ்வாறே 1963ஆம் அண்டிலே செல்வச்சந் நிதி முருகனது அருடபுகழைப் பாடத் தொடங்கியதிலிருந்து அவ்வப்போது மாவைக்கந்தன், நல்லைக்கந்தன், கதிர்காமக்கந்தன் என சுமார் முப்பது வருடங்களாக முருகன் மற்றும் கணபதி, சக்தி மீதும் பாடிய அருட்பாடல்கள் சுமார் 185ற்கும் மேற்பட்டவை இவ் அருட்புகழ் என்னும் பாடற்தொகுப்பிலே அடங்கியுள்ளன. எனினும் அடியார்க்கு நல்லபெருமானாம் ஆறுமுகன் அருளும் கூடி நெஞ்சின்கண் கல்லையும் கசிந்துருகச் செய்யும் செந்தமிழால் சந்தக்கவிகள் பலவற்றால் முருகப் பெருமானைத் தான் அதிகமாகப் பாடியுள்ளார். அவற்றினைப் படிக்கும் தோறும் மனதிலே இனம்புரியாத ஒரு அமைதியுணர்வு ஏற்பட்டது. அருட்கவிஞரால் எழுதப்பட்ட எல்லாப் பாடல்களுமே எதுகை மோனை மட்டுமல்ல எளிய சொற்களும், பொருட்செறிவும் இனிமையான சந்த ஓசையும் கொண்டமைந்தவையாகக் காணப்படுகின்றன.

ஒவ்வொரு இறைவனைப் பற்றிய பாடல்களிலும் அவரவர்க் குரிய புராண வரலாறுகளையும், சிறப்பாகவுள்ள அருட்செயல்களையும், அவர்களது திருவருட் சிறப்பையும், புகழையும் எடுத்துக்கூறும்போது அவற்றைத் தாமே உணர்ந்து உருகி நினறு பக்தியுடன் வெளிப்படுத்தும் பாங்கு போற்றற்குரியது. மனிதர்கள் தாமே பாடிப் பயன்பெறும் வகையில் பிரார்த்தனைகளும், வேண்டுதல்களும் கூறப்பட்டு மக்களை இறைவனிடம் ஆற்றுப்படுத்தும் பாங்குடனும் அவை அமைந்துள்ளன. பல்வேறு வகையான தாளங்கள், இராகங்களுடன் அருட்புகழ் இசைப் புலமையும் காட்டுகின்றது. அவரது இசைஞானமும் மொழிவளமும் எல்லாவற்றிற்கும் மேலாக அருளாளர் பெற்றுள்ள இறையருள் அனுபூதியும் அவரது அருட்புகழ் பாடல்களில் காணும்போது தமிழ்கூறும் பக்தியுலகிற்கு ஈழத்திருநாட்டில் நல்லதொரு திருப்புகழ் போலப் பெயர்பெறும் 'அருட்புகழ்' பாமாலையும் பயன்சேர்க்கின்றது. செல்வச்சந்நிதியில் அருள்மிகு மாணிக்கப்பிள்ளையாரின் திருவருட் காப்புடன் 'அருட்புகழ்' பாமாலை ஆரம்பமாகின்றது.

பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாதன்
இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## அணிந்துரை

அருணகிரிநாதர் தமிழ்நாட்டிலேயுள்ள முருகன் தலங்களிலும் ஈழத்துக் கதிர்காமத்திலும் வீற்றிருக்கும் முருகன் மேல் திருப்புகழ் பாடினார். இப்பொழுது ஈழத்து முருகன் தலங்களிலே வீற்றிருக்கும் இறைவன் மீது அருட்கவி அவர்கள் அருட்புகழ் பாடுகின்றார். அருணகிரி நாதரைப் போலன்றி, அருட்கவி நாராயணருக்கும், பிள்ளையாருக்கும் அருட்புகழ் பாடியுள்ளார்.

கலாநிதி அருட்கவி சீ.விநாசித்தம்பி தெய்வீக அருள் பெற்ற கவிஞர். அவர் பாடுவனவெல்லாம் அருட்கவிதைகளே. வண்ணச் சுவையும் சந்தச் சுவையும் உள்ள அருணகிரிநாதரின் திருப்புகழ் தமிழ் இலக்கிய வரலாற்றிலே புதுமையான பாடல்களாய் அமைந்தன. இத்தகைய சந்தப்பாடல்கள் பாடுவது எல்லோராலும் முடியாது. ஆனால் அருட்கவி அற்புதமாக அப் பாடலைப் பாடியுள்ளார்.

அருட்கவி விநாசித்தம்பி ஐயாவினுடைய *தெய்வீக அருட்புகழ்* என்னும் இந்நூலுக்கு அணிந்துரை எழுதுவதிலே மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். அருட்கவிதைகளுக்கு அணிந்துரை வேண்டியதில்லை. வழக்கு நோக்கி இவ்வகை உரை எழுதப்படுகின்றது. தித்திக்கும் தீஞ்சுவைத் தமிழோசை ஒவ்வொரு அருட்புகழிலும் இழையோடுகின்றது. அவற்றைப் படித்துச் சுவைத்து இந்த உரையை எழுதியுள்ளேன். அருட்கவியின் இனிமையான கவிதைகள் இன்னும் பெருக அருள்மிகு நாகவரத சுவாமியினை வேண்டுகிறேன்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ்
தலைவர் தமிழ்த்துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

## கவியோகி, அருட்கவி சீ.விநாசித்தம்பி எம்.ஏ அவர்கள்

ஈழத்தமிழர்களின் வரலாற்றில் தமிழுக்கும், சைவசமயத்திற்கும், சமூகத்திற்கும், கலை கலாசாரத்திற்கும் பணிசெய்து அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்தால் கௌரவ முதுகலைமாணிப் பட்டம் பெற்ற கவியோகி அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயா இலங்கையிலும் இந்தியா முதலிய பிற நாடுகளிலும் சமயச் சொற்பெருக்காற்றி மொழி, கலை, கலாசார, பண்பாட்டு எழுச்சியை ஏற்படுத்தியவர். செல்வச் சந்தியான் ஆச்சிரமக் கலைபண்பாட்டுப் பேரவை இவருக்கு 'ஞான பண்டித அமுதசுரபி' என்று பட்டம் சூட்டிக் கௌரவித்தது நினைவு கூரத்தக்கது.

அநுபூதிமானாகிய அருட்கவி ஐயா அவர்கள் தான் சுகித்த அநுபூதச்சாரத்தை, இறையருளை ஏனையோருக்கும் செறியக்கூடியதாக தன அருள்வாக்கினால் வழிகாட்டி வருகிறார். அவரது இருபபிடத்தை நோக்கிப் பக்தர்கள் கூட்டம் திரண்டு வருவதையும் நலம்பெறுவதையும காணலாம்.

எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய கருணை வள்ளல் தென்னாட்டில் சிவனாகவும், எந்நாட்டிற்கும் இறைவனாகவும் இருப்பவர் மக்கள உய்யும் பொருட்டு தடத்தநிலைக்கு இறங்கி வருகின்றார். அறம அழிந்து அநியாயம் தலைவிரித்து ஆடும்போது இறைவன் அருளுருக் கொண்டு உலகை உய்யவைக்கின்றார். இவை புராண வரலாறுகள. இவற்றை வெளிப்படத்தவே ஐயா அவர்கள் சாதாரண மக்களும் படிககத்தக்க வகையில் இலகு தமிழில் கந்தபுராண வசன காவியம் போன்ற நூல்களை ஆக்கியுள்ளார். திருவிருத்தம் பதிகம், தமிழ் அர்ச்சனை, பிள்ளைத்தமிழ், திருவூஞ்சல், அந்தாதி, அநுபூதி, விநாயகபுராணம் என நூற்றைம்பது நூல்களுக்கு மேலாக எழுதியுள்ளார்.

தெய்வீக அர்த்தங்களைத் தெளிவுபடுத்தி அருட்கவி ஐயா அவர்கள இயற்றிய 'தெய்வீக அருட்புகழ்' நாம் இறைவனது கருணை பெறுவதற்கும் சாந்தி சமாதானத்திற்கும் வழிகாட்டும் சொத்தாகும். மக்கள் ஓதி நன்னெறி காண்பார்களாக இதனை எழுதுவதற்கு ஸ்ரீவிநாயகப் பெருமான் ஒருவாய்ப்பை சிறியேனுக்குத் தந்தமைக்கு இறைவனைப் பிரார்த்தித்து ஐயா அவர்களை இதயத்தில் பூசித்து நன்றியுடன் விடைபெறுகின்றேன்.

பொறுப்பாசிரியர்
யாழ். மத்தியகல்லூரி

ஞான.திருக்கேதீஸ்வரன்
இந்துமன்றம்.

**மலரமைப்பு**
**ஞான.திருக்கேதீஸ்வரன்**



## தெய்வீக அரு...

### நூல் வெளியீடும் இறுவட்...

| | |
|---|---|
| இடம் | :- இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் ... கல்யாண மண்டபம் |
| காலம் | :- 27.03.2005 ஞாயிற்றுக்கிழமை ... |
| தலைவர் | :- க.தேவராஜா (வணிகத்துறைத் தலை... |

### நிகழ்வுகள்

| | |
|---|---|
| மங்கள விளக்கேற்றல் | |
| தேவாரம் | |
| வரவேற்புரை | - இரா.அருட்செல்வம் (A.T.C... |
| தலைமையுரை | |
| தொடக்கவுரை | - ஞான. திருக்கேதீஸ்வரன் ... |
| வெளியீட்டுரை | - N.விஜயசுந்தரம் (வலம்புரி ... |
| சிறபபுரை | - பேராசிரியர் கோபாலகிருஷ்ண... |
| | போாசிரியர் அ.சண்முகதாஸ்... |
| நயப்புரை | - பேராசிரியர் திருமதி கலைவா... |
| ...த்கவுரை | - திருமதி மனோன்மணி சண்மு... |
| கலைஞர்களைக் கௌரவித்தல் | |
| நூலாசிரியர் உரை | |
| நன்றியுரை | - திரு.சண்.வாமதேவன் |
| | (அதிபர், கோண்டாவில் இராமகிருஷ்ண மகா... |

அனைவரையும் அன்புடன் அழைக்கி...
கலாநிதி. விநாசித்தம்பி குழுந்தைகள் காக்...
திருநெறிய தமிழ்மறைக் கழக...
இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோ...
இணுவில் இந்துக்கல்லூரி பழைய மாண...
இணுவில் பொதுநூலக மூதவை உறுப்...
இணுவில் பொது நூ... இலண்...
தேவா பொன்விழாச் சபை, அருள் வெள்ள...


கங்கை கொம்பியூட்டர் (பி) செற் பிறின்ரஸ்
யாழ்ப்பாணம்

சைன் கிறபிக்ஸ்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

அண்ணா தொ...
இணுவில்

பிரவீன் தொலைத் தொடர்பு நிலையம்
கோண்டாவில்

எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்
இருபாலை

A.T.C...
இணுவில்

# சீ. விநாசித்தம்பி அவர்களின்

# ...டு விழா சிறப்பு மலர் 27.03.2005





## அருட்புகழ்

...றுவட்டு வெளியீடும்

...ரராஜசேகரப் பிள்ளையார்
...டபம்
...ற்றுக்கிழமை பி.ப 3.00 மணி
...ணிகத்துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்)

...வுகள்

...ல்வம் (A.T.C அதிபர்)

...கதீஸ்வரஎள்ள
...ம் (வலம்புரி ஆசிரியர்)
...காபாலகிருஷ்ண ஐயர்
... சண்முகதாஸ்
...மதி கலைவாணி இராமநாதன்
...ன்மணி சண்முகதாஸ்

...தேவன்
...இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்)
...டன் அழைக்கின்றோம்.
...ந்தைகள் காக்கும் கரநிதியம்,
...மறைக் கழகம்,
...ள்ளையார் கோயில் அடியார்கள்,
... பழைய மாணவர் சங்கம்,
...மூதவை உறுப்பினர்கள்,
... இலண்டன் கிளை,
... அருள் வெள்ளிவிழாச் சபை.

## தெய்வீகம் கைவரப்பெற்ற கவிஞர்

இறைவன் திருவருளுக்குப் பாத்திரமாகி இறைவன் மீது தோத்திரம் பாடிவரும் பணியில் தன்னை அர்ப்பணித்த அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்களின் "தெய்வீக அருட்புகழ்" என்கின்ற கவிதை நூலையும், இறுவெட்டினையும் இணுவிலில் வெளியிட்டு வைப்பதில் பெருமகிழ்வடைகின்றோம்.

"தெய்வீக அருட்புகழ்" என்ற நூலானது அருணகிரி நாதரின் திருபுகழ் பாங்கையொட்டியதாக அருட்கவியால் ஆக்கப்பட்டுள்ளமை பெரிதும் பாராட்டைப் பெற்றுள்ளது. எமது நாட்டின் 43 திருத்தலங்கள் மீது பாடப்பெற்ற பாடல்கள் இன்று நூல்வடிவில் மட்டுமல்லாது இறுவெட்டு வடிவிலும் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இன்னிசை வேந்தன் பொன். சுந்தரலிங்கம் உட்பட பல முன்னணிப் பாடகர்களின் கைவண்ணத்தில் வெளிவரும் இறுவெட்டு செவிகளுக்கு இனிமை தருவதாக ஆக்கப்பட்டுள்ளது. இவையிரண்டும் சமகாலத்தில் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்தின். கலியாண மண்டபத்தில் வெளியிடப்படுவது எமக்கு பெருமையளிப்பதாக அமைவதுடன் "திருப்புகழுக்கோர் அருணகிரி தெய்வீக அருட்புகழுக்கோர் அருட்கவி" என்ற பெருமையுடன் நூலையும் இறுவெட்டையும் வெளியிட்டுவைக்கின்றோம்.

க.தேவராஜா
தலைவர்
வணிகக்துறை.
யாழ்.பல்கலைக்கழகம்.

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருநெறிய தமிழ்மறைக் கழகம் அருட்கவியைப் பாராட்டி வாழ்த்தி வணங்கியளித்த

## வாழ்த்துப் பாமாலை

காருவந்த கழனிகள் சூழளவையூர் தந்த உத்தமனே!
விநாசித் தம்பி யருட்கவியே ஐயா!
பேருவந்து பெருமைமிகு பட்டங்கள் உமக்களித்து
பெருமை கொண்டார் பல்கலைக் கழகத்தினர்
சீருவந்த சிறப்புக் கொண்டார் செம்மையுறு மனமுடையோர்
ஊருவந்து கொண்டது உன் புகழ்பாடி
நீருவந்து கொண்ட தென்ன உயர்புலவ அருட்புகழை
நாமுவந்து கொண்டோமையா வாழிய! நீ பல்லாண்டு

நம்பிவரு மடியவர்க்கு நீறுசாத்தித் தீவினைகளகற்றி
தீராதநோய் நீக்கும் அருமருந்தே!
அம்புவியில் அற்புதங்கள் பலகாட்டி அகலாத
அடியவர்க்கு அருள்வழியுங் காட்டி
இம்பருலகுய்ய அழகொழுகு நாகவரத நாராயணன்
கோவிலொன்று நல்வரமாய் அமைத்து
உம்பருலகும் மகிழ உவந்திருக்கும் உத்தமரேயுன்
பாத கமலங்கள் வணங்கினோம்' வாழியவே!

அருட்கவி ஆனந்தக்கவி அன்புக்கவி அறம்வளர்க்கும்
உயர்கவி உயிர்கட் கெல்லாம்
பொருட்கவி படிப்போரெல்லாம் மகிழ்விக்க வந்தகவி
பரந்தாமன் பாதமலர் பாடுங்கவி
நெருங்குஞ் சிவப் பேறுபெற்ற திருமகனே தெய்வமே!
வற்றாத ஊற்றாக நின்று
பெருங்கவிகற் சொரிந்து விடுந்தெய்வத் தமிழேநின்
மலர்த்தாள் வணங்கினோம் வாழ்த்துகிறோம்

பொன்னார மணிமகுடம் மின்னும் பராசத்தியவள்
அருள்நோக்குப் பெற்ற மெஞ்ஞானமே!
மின்னார்ந்த சடைமுடியில் மிளிருங் கொன்றைச்
சிவனாரின் மைந்தனையு மொத்துநின்றாய்
மெஞ்ஞானச் சைவநெறிக் காவலனாம் நல்லைநகர்
நாவலனையும் ஒத்து நின்றாய்
அஞ்ஞான மகற்றும் அறிவொளியே! பேரருளே! நினைவணங்கும்
பேறு பெற்றோம் வாழியவே! பல்லாண்டு

ஆக்கம:
பண்டிதை திருமதி வை.கணேசபிள்ளை
இணுவில்.

வாழ்த்துவோர் வழங்குவோர்
திருநெறிய தமிழ்மறைக் கழகத்தினர்
இணுவில் தெற்கு.

## எமது நோக்கு

இறைவனைப் பாடிப் பரவும் மரபு எமது சமயத்தில் பனனெடுங் காலமாக நிலவிவருகின்றது. இறைவனுக்கென பாமாலை இயற்றுவதற்கு ஒருவருக்கு இறையருளும் துணை செய்கின்றது. தென்னாட்டுச் சமயமரபில் நாயன்மார்களும் மற்றும் அருணகிரிநாதா போன்றோரும் இறையருள் சிந்திக்கப்பெற்றவர்களாய் இறைவன் மீது பாடல்கள் பாடிப் பரவசமடைந்துள்ளதோடு எதிர்காலத்தில் மக்களது ஆன்மீக வாழ்வு வளம் பெறவும் உதவியுள்ளனர். இத்தகைய மரபினை அடியொற்றி அருளாளர்களும், கவிஞர்களும் எமது நாட்டிலும், தென்னாட்டிலும் தத்தமது இஷ்ட தெய்வங்கள் மீது பாடல்பாடி ஆத்மீக நலம்பெற்று வருகின்றனர். இவ் வரிசையில் இறைவனது திருவருளுக்குப் பாத்திரராகிப் பல வருடங்களாக இப்புனித பணியில் தம்மை அர்ப்பணித்து வருபவராக விளங்குபவர் அருட்கவி விநாசித்தம்பி அவர்களாவர். எமது நோக்கில் அவர் புண்ணியஞ் செய்த கவிஞராக விளங்குபவர். அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணரது தெய்வீகக் கைங்கரியத்தில் தம்மை ஈடுபடுத்திய நிலையில் சிறுவயது முதல் இத்தகைய பாடல்கள் பாடிவரும் மரபைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருபவர். திருவூஞ்சல், தோத்திரமாலை, அந்தாதி, கீர்த்தனங்கள், அருட்புகழ் என்றவாறு பல பா வடிவங்களிலும் இவர் இறைவன் புகழைப் பாடிப் பரவிவருபவர்.

இவரது "தெய்வீக அருட்புகழ்" என்ற இக்கவிதை நூல் அருணகிரிநாதரின் திருப்புகழ் பாங்கையொட்டியதாக உருவாகியுள்ளது. இம் முயற்சி வரவேற்கத்தக்கது. பாராட்டிற்குரியது. இளந்தலைமுறையினரை ஆத்மீக நெறியில் ஈடுபடுத்தவல்ல பாடல்கள் அவ்வவ்வூர் சார்ந்த தெய்வங்கள் மீது பாடப்பட்டுள்ளன. செல்வச்சந்தி, நல்லூர், கதிர்காமம், மாவிட்டபுரம் ஆகிய தலங்களில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமான் மீதும் ஏனைய தலங்களில் எழுந்தருளியுள்ள கந்தசுவாமி மீதும் திருக்கேதீச்சரப் பெருமான் மீதும் மருதடி போன்ற தலங்களில் எழுந்தருளியுள்ள விநாயகப் பெருமான் மீதும் நாட்டின் ஏனைய இடங்களில் எழுந்தருளியுள்ள தெய்வங்கள் மீதும் திருப்புகழ் பா வடிவில் அருட்புகழ் மாலையை ஆசிரியர் பக்தியுணர்வுடன் சூட்டியுள்ளார். இப்பாடல்கள் பக்திச் சுவையுடனும் இசை மரபுடனும் பிணைக்கப்பட்டுள்ளன. இப்பாடல்களைப் பாடும்போது தலங்கள் தோறும் எழுந்தருளி அருள்சுரக்கும் தெய்வங்களது திருவருட் சிறப்புக்களை நாம் சிந்திக்கவும் வழிபடவும் வழியேற்படுகின்றது. இப்பாடல்களிற் சில இராகம், தாளம் ஆகிய சிறப்புக்களுடன் அமைவதால் இசைக்கலைஞர்களுக்கும் வரப்பிரசாதமாக அமைவன. ஆத்மீகநலன் பெறுவதற்கும் இசை இன்பம் பெறுவதற்கும் உறுதுணையாக அமையும் இப்பாடல்களை சைவ உலகம் மனமுவந்து வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

எமது பிரதேசத்திலுள்ள முருகன் ஆலயங்கள் மட்டுமன்றி எமது நாட்டில் புகழ்பெற்ற ஆலயங்கள் மீது "அருட்புகழ்" பாடப்பெற்றுள்ளதால் இக்கவிதை நூல் எமது நாட்டு ஆலயங்கள் பற்றிய ஒரு வரலாற்று ஆவணமாகவும் விளங்குகின்றது.

"அருட்கவி" என்ற நிலையில் கவிதை புனையும் ஆற்றல் பெற்ற அருட்கவி விநாசித்தம்பி அவர்களது "அருட்புகழ்" ஓர் அருமையான தோத்திரமாலை என்பதே எமது நோக்கு. அருட்கவி அவர்கள் முருகப்பெருமானின் திருவருளால் நலமுடன் இனிதே நீடுழி வாழ்ந்து, இத்தகைய ஆத்மீகப் பணியை மேன்மேலும் ஆற்றுவதற்கு அவரைப் பாடவைத்த மனோன்மணி அம்பிகையின் திருவருட்கடாட்சம் பொலிவதாகுக.

பேராசிரியர் கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர்
முன்னாள் கலைப்பீடாதிபதி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.



கலாநிதிப் பட்டம் வழங்கிய போது

...தொழிலகம்
...வில்

விக்கினேஸ்வரா
கொக்குவில்

கஜசங்கவி
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

...T.C
...வில்

K.T.C
கோண்டாவில்

K.R.S
கொழும்பு. யாழ்ப்பாணம்.

# கல்லறைக்குள்ளிருந்து மலர்ந்த வாழ்வின் நம்பிக்கை

## பரமபிதா காட்டியபாதை

"ஏன் என்னைத் தேடினீர்கள்? என் தந்தையின் இல்லத்தில் நான் இருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரி



உயிர்ப்பும் உத்தானமும் நாமே

யாதா?'' என்றார். அவருடைய தாய் இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தன் உள்ளத்தில் கொண டிருந்தாள். (லூக்காஸ் 2:49 -51)

இயேசுவின் இறப்பு - உயிர்ப்பு நிகழ்ச்சியின் உட்பொருளை நாம் முழுமையாய் உணர்ந்து கொள்ள அவரது வார்த்தைகளை நினைவில் வைத்திருப்பது மிகவும் முக்கியம். தாங்கள் ஆயத்தம் செய்திருந்த நறுமணப பொருட்களை எடுத்துக்கொண்டு பெண்கள் சிலர் இயேசுவின் கல்லறைக்குச் செல்கின்றனர்.

அவரின் உடலை அங்கு காணாததால் குழம்பிப் போகின்றனர். இக்குழப்பத்திற்குக் காரணம் இயேசு கூறிய வார்த்தைகளை அன்னை மரியாளைப போன்று மனதில் பதித்து வைக்காதே... என்பது வான தூதர் கூற்றிலிருந்து புலனாகின்றது.

அவ்வாறே இயேசுவும் சீடர்களைக் கடிந்து கொள்கிறார். (லூக் 24:44- 48) உயிரோடு இருப்பவர் கல்லறையில் இல்லை. மாறாக அவர் வார்த்தையில் என்றும் வாழ்கிறார்.

இறை வார்த்தையில் இணைந்திராத காரணத்தாலே திருத்தூதர்கள் உயிர்ப்பின நற்செய்தியைக் கேட்டு அது வெறும் பிதற்றல் என்று எண்ணினர். இறைவார்த்தையில் நம்பிக்கை வைதது அதை வாழ் வழிக்கும் கிறிஸ்தவர்களே மறைபொருட்களின் உண்மைகளை உளளூர உணரமுடியும்.

இயேசு வாழ்வில் ஊற்று இதைப் பிறருக்கு வழங்கவே தொடக்கத்தில் இருந்தே தன்னைக் கையளித்தவர் அவர். அன்பில் கனிந்தவர். எனவே இறப்பு என்பது அவருக்கு இல்லை. அன்பின் முழுமையில் என்றோ அவர் இறந்து விட்டாரே இந்த உண்மையை அல்லது முழுமையாக ஒரு சிறிய கல்லறையில் அடக்கி வைத்து விட முடியுமா? வாழ்வு அதை உடைத்துவிட்டு வெளியேறுகிறது.

> பொய்மையினின்று மெய்மைக்கும்
> இருளினின்று ஒளியினுற்கும்
> சாவினின்று வாழ்வினிற்கும்
> அழைத்துச் செல்வீர் அவ்வேலுாயா!

அன்பின் முழுமையிலே தான் வாழ்வை நாம் கண்டுணர முடிகின்றது. நம்பிக்கையும் ஆழமடைகிறது. இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு நம் அனைவரின் வல்லமை ஒரு மாபெரும கொடை வாழ்வுக்கு எதுவுமே இனித் தடைவிதிக்க முடியாது. வாழ்வின் முழுமை நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்ற எதிர்நோக்கு நம்மை மகிழ்விக்கின்றது. இந்தக் கொடையை நாம் முழுமையாக நமதாக்கிக் கொள்ள வேண்டும். அப்படியானால் நாம் அன்பில் கனிந்தவர்களாய் இருக்க வேண்டும். நாம் இயேசுவின் தனிபபட்ட அன்பியங்களாய் மாறவேண்டும்.

மலர்கள் உதிர்ந்த பின் எழுவன தாம் கனிகள். மரணம அஸ்தமனம் அன்று அது மறு உதயம் இயேவின் மரணம அன்பின் வெற்றி, நீதியின் வெற்றி! மனிதத்தின் வெற்றி! உண்மை ஒருபோதும் உறங்குவதில்லை என்று உலகிற்கு எடுத்துக்காட்டுவது அவரது மரணமே, ஆம் மலர்கள் தமக்காக மலர்வதில்லை. காய் தனக்காகப் பழுப்பதில்லை. ஆறு தனக்காக ஓடுவதில்லை. வானம தமக்காகப் பயணிப்பதில்லை. சான்றோர் தமக்காக வாழ்வதில்லை.

கிறிஸ்துவின் சீடர்கள் அழைககப்பட்டு அனுப்பப்படுவது நமக்காக அல்ல. தன்னை முழுவதும் இறைவனுக்காக மக்கள் பணியில் கரைத்துக் கொள்வதற்காகவே இவ்வாறு எமமை முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணிக்கும் போது எம் உள்ளங்களில் கிறிஸ்து நிச்சயம் ஒளிர்வார். "ஆயுதங்களில் எல்லாம் அன்பே வலிமையானது'' என்கிறார் காந்தியடிகள். பல வேளைகளில் துன்பங்கள் மனிதனை ஆட்கொள்கின்ற போது நம்பிக்கை என்ற ஆயுதத்தை மனிதன் மறந்து விடுகிறான்.

மகா அலெக்சாண்டர் நோய வாய்ப்பட்டு இறக்கும் தறுவாயில் தன் ஊழியர்களிடம் சொன்னார் "நண்பர்களே நான் சாகும போது எனது கைகள் இரண்டும சவப்பெட்டியின் வெளியே தொங்கிச் செல்லட்டும் ஏனென்றால் படைவலிமையும், மனவலிமையும், உடல் வலிமையும் கொண்ட ஒருவன் ஒன்றுமில்லாமல் செல்கின்றான் என்று மக்கள் உணரட்டும். நாம் இவ்வுலகில் வாழ்வது மிகவும் குறுகிய காலம் ஆகவே நாம் வாழும் காலமல்ல. நாம் வாழும் விதமே வரலாறு தேடும். என்பதை நாம் உணரவேண்டும். நாம் சற்றுச் சிந்திப்போம். நடந்து போகிறவன் சைக்கிள் கிடைக்கிறதா என்ற ஏக்கம்... சைக்கிளில செல்கிறவனுக்கு மோட்டார் கிடைக்காதா என்ற ஏக்கம்... இப்படி மனிதன் இன்று மகிழ்ச்சியைத் தேடி அலைகிறான்... பயணம் செய்கிறான்.

நாம் வாழும் நவீன உலகத்தல் வெற்றியடைய வேண்டும். முதலிடத்தைப் பிடிக்க வேணடும் என்ற தாக்கம் அனைவரிலும் இருப்பதால் எங்கும் போட்டியே நிறைந்துள்ளது. இக் காலத்தில் பலர் முதலிடத்தில் இருப்பதைக் காண முடிகிறது. ஆனால் உண்மையில் பணியாளனை/தொண்டனை காண்பது அரிது இவ்வுலகில் நன்மை - தீமைக்கும் இருள்-ஒளிக்கும் உண்மை - பொய்க்கும் என்றுமே போராட்டம் வாழ்விலே எதுவுமே நிரந்தரமில்லை.

> மரணத்தை வென்று மனுக்குலத்தை
> பாவததிலிருந்து இரட்சித்தவர் இயேசு!

சாவை வெறுக்கிறேன் வாழ்வை நேசிக்கிறேன் ஆனால் சாவு வாழ்வைத் தருமானால் சாவையும் நேசிக்கிறேன். "மனிதன் வாழப் பிறந்தவன எல்லா நலன்களும் பெறறு சிறப்பாய் வாழப் பிறந்தவன்'' என்கிறார் ஒரு அறிஞர். உலகில் அன்பு தான் தலை சிறந்த மானிடப் பண்பு அந்த அன்பை நம்மை அன்பு செய்தவர்களுக்கு மட்டுமே நாம் கொடுக்கின்றோம். அதனால் என்ன பயன்? இந்த சமுதாயத்தில் ஒருவராலும் அன்பு செய்யப்படாத அனாதைகள், ஏழைகள், கைவிடப்பட்டோர், ஒதுக்கப்பட்டோர் என எத்தனை பேர் உள்ளனர். அவர்களுக்குத் தான் நம் அன்பும், உறவும் சென்று சேர வேண்டும். இப்படிப்பட்டவர்களை பணக்கார வர்க்கம் பகைவர்களாகக் கருதி வருகின்றனர். இவவாறு கைவிடபபட்டோர் மக்களோடு உறவு கொண்டு, பகிர்ந்து சம நிலையை உருவாக்கவேணடும் அப்போது தான் அன்பு, அர்ததம் பெறுகிறது.

இறைவனின் பிரசன்னம் இல்லாத இடம் எங்கே? ஆகவே உண்மையை உள்ளத்தில் தேட வேண்டும். கடவுள் மனிதனை இன்பமாய் வாழப்படைத்தார். ஆனால் அவனோ இன்பததைத தவறாகவே பயன்படுத்தினான்.

கடவுள் இன்பத்தை மனிதனுக்கு எட்டாத துாரத்தில் ஒழித்து வைக்க விரும்பினார். பூமிக்குள் புதைத்து வைத்தால் தோண்டி எடுத்து விடுவான், ஆழ்கடலில் ஒழித்து வைத்தால் ஆழ்கடலையும் அலைசிவிடுவான், ஆகாயத்தில் வைத்தால் அளந்துவிடுவான் எங்கு தான் வைப்பது என்ற நீண்ட யோசனைக்குப் பிறகு

**நோயல்**

கடவுள் சொன்னார் "மனிதனின இதயத்துக்குள்ளேயே ஒழித்து வைப்போம்" அங்கே தான் அவன் தேடவே மாட்டான்.

மகிழ்ச்சியை அங்குமிங்கும் தேடிப் பயனில்லை. நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் தான் ஏராளமாகக் கொட்டிக்கிடக்கிறதே! மரணத்தை வென்ற மனிதகுலத்தை இரட்சித்த இயேசு கிறிஸ்து நம் உள்ளங்களை என்றும் மகழ்ச்சியால் நிரப்புவாராக. □

# உஷ்ணமான கால நிலையால் முகாம் மக்கள் பெரும் அவலம்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தின் கரையோரப் பிரதேசங்களில் தற்போது நிலவும் உஷ்ணமான கால நிலை காரணமாக சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு தற்காலிக கூடாரங்களிலும், நலன்புரி நிலையங்களிலும் தங்கியுள்ள மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் தற்போது இரவிலும் கூட கடுமையான வெப்பம் நிலவுகிறது.

வீசுகின்ற காற்றும் அனல் காற்றாகவே வீசுகின்றது.

இவ் வெப்பக் காலநிலை காரணமாக மின்சாரம் மற்றும் காற்றோட்ட வசதிகள் இல்லாத கூடாரங்களில் மிகவும் நெருக்கமாக வாழ்ந்து வரும் மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றார்கள்.

குறிப்பாக நலன்புரி நிலையங்களில் இருக்கும் குழந்தைகளின் உடலில் உஷ்ணப் பருக்கள் ஏற்பட்டு, நமைச்சல் நோய் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. மழையில்லாத நிலையில் உஷ்ணக் காற்று வீசி வருவதால் தூசுகளும் வளி மண்டலத்தில் அதிகரித்துள்ளது இதனால் மக்கள் சுவாச நோய்களுக்கும் ஆளாகி வருகிறார்கள். (க-7)

## பண்டிகைக் காலத்தில்

# இறைச்சிக்கோழி, முட்டைவிலை அதிகரிக்காமலிருக்க நடவடிக்கை

(கொழும்பு)

பண்டிகைக் காலங்களில் இறைச்சிக்கோழி, கோழி முட்டை ஆகியவற்றை அதிக விலைக்கு விற்கும் வர்த்தகர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுககப்படுமென சுகாதார கால்நடை உற்பத்தித் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இத்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எஸ்.கே.டாக்டர் எஸ்.கே.ஆர்.அமரசேகர இது தொடர்பாக தகவல் அளிக்கையில்,

கோழிகள் முட்டைகள் ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டால் அவற்றை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் எனத் தெரிவித்துள்ளார். (க-7)





யாழ்.மரியன்னை பேராலயத்தில் நேற்றுமுன்தினம் யாழ்.ஆயர் தோமஸ சவுந்தரநாயகம் ஆண்டகை, பெரிய வெள்ளித் திருப்பலியை ஒப்புக்கொடுக்கும் போது எடுக்கப்பட்டபடம். (படங்கள்:நோயல்)

# அஞ்சா நெஞ்சம் கொண்ட பஞ்சாப்புலி பகத்சிங்

(நேற்றைய தொடர்ச்சி)

ஆதாரம்: IBRD (Page 28)இங்குதான் இந்திய அரசியல் சரித்திரத்தில் ஒரு பெரிய மாற்றம் நடைபெற்றுள்ளது.

பகத்சிங்கின் தண்டனையைக் குறைக்க வேண்டும் என்று கேட்பதற்குப் பதிலாக, இந்தத் தண்டனையை எப்போது நிறைவேற்றலாம் என்றுதான் மகாத்மா காந்தி ஆங்கில அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ள விடயம், அரசாங்க கோப்பில் உள்ளது.

பட்டாபி சீதாராமையாவும் இதனை ஒப்புக் கொள்ளுகின்றார். கராச்சியில் நடைபெறவிருக்கும் காங்கிரஸ் கூட்டம் முடியும் வரை பகத்சிங் முதலானோரது தூக்குத்தண்டனையை ஒத்திப் போடுவதற்கு ஆங்கிலேய அரசு தயாராக இருந்த போதிலும், காந்தி யாரோ அந்த இளைஞர்களை காங்கிரஸ் மாநாட்டுக்கு முன்னரேயே தூக்கிலிடுவதுதான் நல்லது என்று உறுதியாகக் கூறிவிட்டதாகவும் சீதாராமையா எழுதியுள்ளார்.

**"Ganthi himself definitely stated to the Viceroy that, if the boys should be hanged, they had better be hanged before the Congress, than after."**

அதாவது அப்போது நடைபெற இருந்த கராச்சி காங்கிரஸ் மாநாட்டிற்கு முன்னரேயே இந்த இளைஞர்களைத் தூக்கிலிடலாம் என்று காந்தியார் ஒப்புதல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து எமர்சன் 20-03-1931 அன்று காந்திக்கு எழுதிய கடிதத்தில், பகத்சிங் தண்டனை குறித்து நேற்றிரவு உங்களோடு பேசியபடி... என்று தொடங்குகின்றார்.

அக் கடிதத்தில், அன்று மாலை நடைபெறவிருக்கும் ஒரு கூட்டத்தைப் பற்றிப் பேசப்பட்டுள்ளது. பகத்சிங்கின் தண்டனையைக் குறைக்கச் சொல்லி வலியுறுத்துவதற்காக நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பேசவிருக்கும் கூட்டம் அது. அக் கூட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, அது மக்கள் மத்தியில் பெரும் உணர்ச்சியைத் தூண்டக்கூடும் என்பதனால், அதனை எப்படி ஒதுக்குவது என்று காந்தியிடம் அக்கடிதத்தில் யோசனை கேட்கப் பட்டுள்ளது. அந்தக் கடிதத்திற்குக் காந்தி உடனடியாகப் பதில் அளிக்கின்றார்.

**இந்தக் கட்டுரை வெறும் கற்பனையின் அடிப்படையில் உருவானதல்ல. இக்கட்டுரையில் தரப்பட்ட கருத்துகள் பல ஆய்வு நூல்களிலிருந்தும் உண்மையான ஆவணங்களிலிருந்தும் சம்பந்தப்பட்டவர்களின் கடிதங்களிலிருந்தும் பெறப்பட்டனவாகும். கிட்டத்தட்ட 24 தமிழ்நூல்களும் 22 ஆங்கிலநூல்களும் "இந்திய அரசியல்" என்ற நூலும் 1931ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'வீரத் தியாகி சர்தார் பகத்சிங்' என்ற நூலும் இக்கட்டுரையாக்கத்திற்கு உதவியாக இருந்தன. பல சுதந்திரப் போராட்ட வீரர்கள், அரசியல் தலைவர்கள், ஆங்கில அதிகாரிகள், மருத்துவ அதிகாரிகள் போன்றவர்களின் குறிப்புக்களும் கடிதங்களும் பல விடயங்களைப் புரிந்து கொள்ள உதவின.**

என் அருமை எமர்சன் சற்று நேரத்துக்கு முன்பு பெறப்பட்ட தங்கள் கடிதத்துக்கு நன்றி. தாங்கள் குறிப்பிட்ட அக்கூட்டம் பற்றி நான் அறிவேன். என்னால் இயன்ற எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துள்ளேன். என்பதோடு, விரும்பத்தகாத எதுவும் நடைபெறாது என்றும் நம்புகின்றேன்... என்று மேலும் எழுதி, எம்.கே. காந்தி என்று கையொப்பம் இட்டுள்ளார்.

இதேவேளை, பகத்சிங்கின் தந்தையான கிஷன்சிங், தாளாத பாசத்தின் காரணமாக ஆங்கிலேய அரசிற்கு கருணை மனு ஒன்றைக் கொடுத்து, பகத்சிங்கை விடுதலை செய்யுமாறு கேட்டிருந்தார்.

இதனைக் கேள்வியுற்ற பகத்சிங் மிகவும் கோபமடைந்தார். அவர் தனது தந்தைக்கு எழுதிய நீண்ட, கடுமையான பதில் கடிதம் அவருடைய தியாகத்

## மெல்லக் கிளம்பும் மறைக்கப்பட்ட உண்மைகள்

தையும், துணிவையும் காட்டுகின்றது. அக்கடிதத்தில் ஓரிடத்தில் அவர் இவ்வாறு எழுதுகின்றார்.

"நான் எனது முதுகில் குத்தப்பட்டதாக உணருகின்றேன். இதே காரியத்தை வேறு யாரேனும் செய்திருந்தால் அது துரோகத்திற்குச் சற்றும் குறைவானதல்ல என்றே கருதியிருப்பேன். ஆனால் உங்களைப் பொறுத்த வரையில் இது மிக மோசமான பலவீனம் என்றே சொல்லுகின்றேன்."

23.3.1931 அன்று இரவு 7.33 மணிக்குச் சாவைச் சந்தித்த கடைசி நிமிடம்வரை பகத்சிங்கும் அவரது தோழர்களும் உற்சாகமாகவே இருந்தார்கள். இறுதி நேரத்திலும் பகத்சிங் மங்கிய வெளிச்சத்தில், மங்காத ஆர்வத்துடன் ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கிறார். அது தடை செய்யப்பட்ட ஒரு சிவப்புப் புத்தகம். லெனின் எழுதிய "அரசும் புரட்சியும்"

அந்த இறுதிநேரம் வந்தது. தூக்குமேடைக்கு அழைத்துச் செல்ல காவலர்கள் வந்து கதவைத் தட்டுகிறார்கள். அவர்கள் பக்கம் திரும்பி பகத்சிங் கேட்கின்றார், "இன்னும் இரண்டு பக்கங்கள் தான் பாக்கி இருக்கின்றன. படித்துக்கொள்ளட்டுமா?"

பிரமித்து நிற்கிறார்கள் காவலர்கள். எப்படிப்பட்ட மனிதன் இவர்? லெனினின் புத்தகத்தைப் படித்து முடித்துவிட்டு, தூக்கு மேடையை நோக்கி நடந்து செல்கின்றார் பகத்சிங்.

மாஜிஸ்ரேட், சிறைச்சாலைகளின் இன்ஸ்பெக்டர் ஜெனரல் போன்ற உத்தியோகத்தர்கள் முன்புறமுள்ள பெரிய வாயில் வழியாக வராமல் விசேட விசாரணைக்கோட்டுக்குப் போகும் வழியாக உள்ளே வந்தார்கள். அவர்களைப் பார்த்த பகத் சிங், 'நீங்கள் பாக்கியசாலிகள்! இந்திய மண்ணின் வீரர்கள், தங்கள் நாட்டின் விடுதலைக்காக புன்னகையோடு சாவைத்தழுவும் காட்சியை நேரில் பார்க்கும் புண்ணியம் உங்களுக்கு கிடைத்திருக்கிறது' என்று சிரித்துக் கொண்டே சொன்னார். தூக்கு மேடையில் பகத்சிங் நடுவில் நின்றார். ராஜகுரு அவருக்கு வலது பக்கத்திலும், சுகதேவ் அவருக்கு இடது பக்கத்திலும் நின்றார்கள். சுருக்குக் கயிறு அவர்கள் மீது மாட்டப்பட்ட போது அவர்கள் அதை முத்தமிட்டார்கள். மூவரும் ஒரு வரை யொருவர் கடைசித் தடவையாக தழுவிக் கொண்டு தங்களுக்குள் பேச ஆரம்பித்தார்கள்.

பேசத் தொடங்கிய ஒரு நிமிடத்துக்குள் தூக்குப் பலகை தட்டி விடப்பட்டது. பகத்சிங் ஒரு கணத்தில் உயிர் இழந்தார். அவரைவிட மெலிந்திருந்த மற்ற இருவரும் மரணமடைய மேலும் இரண்டொரு விநாடிகளாயின. இத்தகைய உயரிய விடுதலை வீரனுக்கும், அவனது தோழர்களுக்கும் எமது சிரம் தாழ்த்திய வணக்கங்கள்.

(நன்றி:-தமிழ்க்குரல்)

### ஒன்றுகூடல்

கொழும்புத்துறை திருமறைக் கலா மன்றத்தால் "குருதி கழுவிய குவலயம்' நாடக நடிகர்கள் பின்னணிக் கலைஞர்களுக்கான விசேட ஒன்றுகூடலும் அனுபவப் பகிர்வும் இன்று பிற்பகல் 5மணிக்கு திருமறைக் கலாமன்ற திறந்த வெளி அரங்கில் யோ.யோன்சன் ராச்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது. (க-51)

## உயிர்ப்பு ஞாயிறு மெழுகுதிரி பவனி

(யாழ்ப்பாணம்)

கட்டைவேலி மெதடிஸ்த ஆலயத்தில் இன்று காலை 5.30 மணிக்கு மெழுகுதிரி பவனி இடம்பெறவுள்ளது.

மேற்படி ஆலயம் அமைந்துள்ள அணிஞ்சிலடியிலிருந்து இம் மெழுகுதிரி பவனி ஆரம்பமாகி ஆலயத்தை சென்றடையும். தொடர்ந்து உயிர்ப்பு வழிபாடு பருத்தித்துறை,கட்டைவேலி முகாமைக்குரு அருட் திரு டி. அழகராஜா தலைமையில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து கருணாமூர்த்தி குடும்பத்தினர் அவர்களது தந்தையார் நினைவாக ஐக்கிய விருந்து வழங்கப்படும். (7-101)

# பொதுக் கட்டமைப்பினை உருவாக்க தேவையான உதவியை வழங்குவோம்

## ஆசிய அபி.வங்கியின் பிரதித்தலைவர் உறுதியளிப்பு

(கொழும்பு)

சுனாமி நிவாரணத்துக்கான பொதுக் கட்டமைப்பினை ஏற்படுத்துவதற்கு தேவையான எத்தகைய உதவியினையும் வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி தயாராகவுள்ளது.

பொதுக் கட்டமைப்பினை உருவாக்குவதன் மூலம் உதவி வழங்கும் நாடுகளின் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்த முடியும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதித் தலைவர் லீகுன் ஜின் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் கருத்துத் தெரிவித்த அவர், அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படுவதை ஆவலோடு தாம் எதிர்பார்த்துள்ளதாகவும் கூறினார்.

இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

மீள் கட்டமைப்புப் பணிகளை முன்னெடுப்பதற்காக 150 மில்லியன் டொலர்களை வழங்குவதற்கு எமது வங்கி தயாராகவுள்ளது.

மீள் கட்டமைப்புப் பணிகளை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமானால் அந்த முயற்சி, இலங்கைக்கு நன்கொடை வழங்கும் நாடுகளின் நம்பிக்கையை மென்மேலும் கட்டி எழுப்புவதற்கு பேருதவியாக இருக்கும்.

சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை கட்டி எழுப்புவதற்கு 1.5 பில்லியன் டொலர்கள் தேவைப்படுமென்று நன்கொடை வழங்கும் நாடுகள் மதிப்பீடு செய்துள்ளன. இதில் 90 மில்லியன் டொலர் உதவிகளை உதவி வழங்கும் நாடுகளுடனான இருதரப்பு உடன்படிக்கையின் மூலம் திரட்டக் கூடியதாய் இருக்கும்.

எஞ்சிய தொகையை அந்நிய நாடுகளின் நன்கொடை மூலம் திரட்ட முடியும் என்றார். (க)

## அரசு மாஸ்ரர் காலமானார்

(யாழ்ப்பாணம்)

அராலியைச் சேர்ந்த சிற்ப, சித்திரக் கலைஞர் சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை கடந்த வியாழக்கிழமை இந்தியாவில் காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது-63.கலையுலகில் 'அரசு மாஸ்ரர்' என அழைக்கப்பட்ட இவர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைச்சுவாமி மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றில் சித்திரபாட ஆசிரியராகக் கடமையாற்றியவர். தனது தம்பியாரான சிற்ப கலாவாரிதி அமர சிங்கத்துடன் இணைந்து தேர்கள், வாகனங்கள் வடிவமைப்பதில் கைதேர்ந்திருந்த இவர், இந்தியாவில் வசித்து வந்த காலத்தில் அங்குள்ள ஆலயங்களுக்கும் வாகனங்களை வடிவமைத்திருந்தார்.மல்லிகை, நங்கூரம் போன்ற சஞ்சிகைகளில் இவரது கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (க)


## விற்பனைக்கு

சகலவிதமான சொனி, பனசொனிக் ரொசிபா கலர் T.Vகளையும், CD, VCD, DVDகளையும், ரேடியோ கசற் றெக்கோடர்களையும், ரைஸ்குக்கர், காஸ்குக்கர், பிறைசோ குக்கர், மின்விசிறிகள், அன்ரனா, பூஸ்ரர், வயர், பைப் செற்கள், சிற்றிசன், சிகோ கைமணிக்கூடுகளையும், சுவர் மணிக்கூடுகளையும், மின்சாரப் பொருட்களையும், அன்பளிப்பு அலங்காரப்பொருட்களையும் ஒரே இடத்தில் நிதான விலையில் பெற்றுக்கொள்ள

நியூ சிற்றி ரேடர்ஸ்

குளத்துக்கு முன்பாக, 135, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். T.P: 222 3226


### புகையிலைச் செய்கையில் நல்ல விளைச்சல்

(ஊர்காவற்றுறை)

தீவகத்தில் பல இடங்களிலும் குறிப்பாக வேலணை- புளியங்கூடல், சரவணை சின்னமடு, நாரந்தனை ஆகிய இடங்களில் புகையிலைச் செடி நல்ல விளைச்சல் கண்டிருப்பதாக புகையிலைச் செய்கையாளர் ஒருவர் தெரிவித்தார். (க)

### தற்காலிக கொட்டகையில் இயங்கும் றோ.க.பாடசாலை

சுனாமி அனர்த்தத்தினால் முற்றாக சேதமடைந்த தாளையடி றோமன்கத்தோலிக்க பாடசாலை மீண்டும் தாளையடியிலுள்ள தனியார் ஒருவருக்கு சொந்தமான காணியில் தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டு கடந்த 21ஆம் திகதி முதல் இயங்குகிறது.

இப் பாடசாலை இதுவரை காலமும் மருதங்கேணியிலுள்ள தனியார் கல்வி நிலையத்தில் இயங்கி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.(க-35)

## SEVENTEENTH DEATH ANNIVERSARY

28 - 08 - 1898



27 - 03 - 1988

### Ponnammah Arulampalam

"....Shining sun-like, self luminous
What fashion His Form has who shall
Conceive of it. He dwells beyond delusion,
The dark of maya,on him let man meditate..."

-Bhagavad Gita.

fondly Remembered by

Daughter: Ranee Selvarajah
and
grand children:
Dushan and Janey

"Selva giri"
57,Arasady Road
Jaffna.

(9413)

# மீள்பார்வை

## பிரியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

## (தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 19



சபையில் உள்ளவாறு பாராளுமன்றக் குழுக்களின் கூட்டநடவடிக்கைகள் "விசாரணை நிலையிலுள்ளது" பற்றிய விதியினால் அவ்வளவு கண்டிப்பாகக் கட்டுப்படுத்தப்படவேண்டியதில்லை. இலங்கையில் பாராளுமன்றக்குழுக்களின் கூட்டநடவடிக்கைகள் பெரும்பாலும் பத்திரிகையாளர்களோ புறத்தவர்களோ இல்லாமல் அந்தரங்கமாக நடத்தப்படுகின்றன. எனினும் பொது மக்கள் பற்றிய குழு நீதிமன்றத்தின் முன்னர் முடிவை எதிர்நோக்கியுள்ள ஒரு விடயத்தை விசாரிப்பதற்கெதிராக விழிப்பாயிருக்க வேண்டும்.

## அத்தியாயம் VIII

### *சட்டம் ஆக்குதல்*

அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டை நீக்கும் அல்லது திருத்தும் அல்லது ஏதேனும் புதிய ஏற்பாட்டைச் சேர்க்கும் சட்டங்கள் உட்பட கடந்த காலத்தையும் உள்ளடக்கும் பயன்கெண்ட சட்டங்களை ஆக்குவதற்கான அடிப்படைச் சட்டமாக்கல் தத்துவத்தை அரசியலமைப்புப் பாராளுமன்றத்துக்கு உரித்தாகின்றது. ஆயின் அரசியலமைப்பை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ இடைநிறுத்தி வைக்கின்ற ஏதேனும் சட்டத்தை அல்லது இயற்றப்படுகின்ற சட்டமானது ஏலவேயுள்ள அரசியலமைப்பை மாற்றீடு செய்கின்ற ஒரு புதிய அரசியலமைப்பை இயற்றினாலொழிய அரசியலமைப்புச் சட்டத்தை முழுமையாக நீக்குகின்ற ஏதேனும் சட்டத்தைப் பாராளுமன்றம் ஆக்குதலாகதென 75 ஆம் உறுப்புரையின் காப்பு வாசகம் விதித்துரைக்கின்றது. பாராளுமன்றத்தின் சட்டவாக்கப்பங்கின் உயர் மேலாண்மை அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் மீதான தீர்ப்பில் விரிவாக ஆராயப்பட்டது. இங்கு உறுப்புரைகள் 154 (எ)2(2) உம் (3) உம் பாராளுமன்றத்தின் இறைமைத் தத்துவத்தை மட்டுப்படுத்தவில்லையென்றும் அவை நடைமுறைக்கட்டுப்பாடுகளை மட்டும் விதிக்கின்றன. வென்றும் கொள்ளப்பட்டது. எனவே பாராளுமன்றம் அரசியலமைப்பினால் அதற்களிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில் மாகாண சபைகளை மேவிச் செல்ல முடியும். ஆகவே சட்டவாக்கப் போட்டியென்ற கேள்வி எழுவதற்கு இங்கு இடமில்லையென்பதை இது காட்டுகின்றது.

பாராளுமன்றம் அதன் சட்டமாக்கும் தத்துவத்தைத் துறத்தலை அல்லது பராதீனப்படுத்துதலை 76 ஆம் உறுப்புரை தடை செய்கின்றது. மேலும் அவ்வுறுப்புரையின் (3)ஆம் உட்பந்தி மூலம் பாராளுமன்றம் துணைநிலைச் சட்டங்களை ஆக்குவதற்கு எவரேனும் ஆளுக்கு அல்லது ஆட்களின் குழுவுக்குத் தத்துவம் அளிக்கக்கூடுமாயுள்ளது.

சட்டவாக்க ஆலோசனைகள் எல்லாம் சட்டமூலங்கள் என்ற வடிவில் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படவேண்டும். வெவ்வேறு வகையான சட்டமூலங்களை அதாவது அரசாங்கச் சட்டமூலங்கள் தனியார் உறுப்பினர் சட்டமூலங்கள் அத்தியாயம் XVII அ இன் கீழான சட்டமூலங்கள் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்கு வெவ்வேறு நடைமுறைகள் உள்ளன. அவசரச் சட்டமூலங்கள் என்ற வகுதியின் கீழும் சட்ட மூலங்கள் அடங்கலாம். அவற்றை நிறைவேற்றுவதற்கு வேறொரு நடைமுறை வகுத்துரைக்கப்பட்டுள்ளது.

### *அரசாங்கச் சட்டமூலங்கள்*

அரசாங்கச் சட்டமூலமொன்றை அமைச்சரவையின் ஓர் அமைச்சர் மட்டும் தான் சமர்ப்பிக்கலாம். அவை ஒரு வேளை வெள்ளை அறிக்கை ஒன்றில் பருவப்பத்திரமொன்றில் சட்ட ஆணைக்குழுவின் ஓர் அறிக்கையில் செய்யப்பட்ட விதப்புரைகளைத் தொடர்ந்து அரசாங்கத் திணைக்களமொன்றில் அல்லது ஓர் அமைச்சில் வகுத்தமைக்கப்படுவதன் மூலம் தோற்றம் பெறுகின்றன. அதன் பின்னர் அதிகாரப்பு,ர்வ வரைவுச் சட்டமூலம் தயாரிக்கப்படுவதற்காக அது சட்டவரைஞருக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றது. அரசியலமைப்பின் 77ஆம் உறுப்புரையின்படி அரசியலமைப்பு ஏற்பாடெதனையும் மீறுகின்றதாவென ஒவ்வொரு சட்டமூலத்தையும் பரிசீலனை செய்யவேண்டியது சட்டமா அதிபரின் கடமையாகும். அவரின் அபிப்பிராயமும் வரைவுச் சட்ட மூலமும் பின்னர் அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதன் பேரில் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்படுவதற்கும் சட்டமாக்கப்படுவதற்காகப் பாராளுமன்றத்துக்கு ஆற்றுப்படுத்தப்படுவதற்கும் தயாராயிருக்கும்.

### *ஒரு சட்டமூலத்தின் அம்சங்கள்*

சட்டமூலங்களில் வழமையாகக் காணப்படும் அம்சங்களாவன சுருக்கப்பெயர். முன்னுரை சட்டமாக்கு வாசகம். பொருள் கோடல் வாசகம். விதி இயற்றும் வாசகம். நீக்குகின்ற வாசகங்கள். மொழிவாசகம் மற்றும் ஓரக் குறிப்புகள். அட்டவணைகளும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக அமையலாம். ஒரு வாசகமாக இலகுவில் உள்ளடக்க முடியாத சில விடயங்கள் அல்லது சட்டமூலத்தின் பிரதம பகுதியில் வசதியான முறையில் உள்ளடக்கப்பட முடியாதவை எடுத்துக்காட்டாக விதித்துரைக்கப்படும் படிவங்கள். நிரல்கள். பட்டியல்கள் ஆகியவற்றை அட்டவணைகளாக முடிவில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன. சில சட்டமூலங்கள் உத்தேச சட்டத்தின் நோக்கத்தைச் சுருக்கமாக விளக்குகின்ற சட்டப்பயன் பற்றிய கூற்றொன்றைக் கொண்டுள்ளன. எனினும் இவ் வழக்கம் ஒரே சீராகப் பின்பற்றப்படுவதில்லை.

### *முதலாம் மதிப்பீடு*

சட்டவாக்கச் செயல் முறையின் முதலாவது கட்டம் சட்டமூலத்தை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடுதல் அதன் மூலம் சட்டமூலத்தைப் பாராளுமன்றத்துக்குக் கொண்டுவந்து அதனைச் சட்டமாக நிறைவேற்றுகின்ற நோக்கம் பற்றிப் பொதுமக்களுக்கு முன்னறிவித்தல் கொடுக்கப்படுகின்றது. வர்த்தமானியில் வெளியிடப்பட்டதிலிருந்து குறைந்தபட்சம் ஏழு நாட்களின் பின்னர் அது பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இடம் பெறலாம். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட ஒரு நாளில அது சம்பந்தப்பட்ட அமைச்சரால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

அதன் பின்னர் சட்டமூலத்தின் சட்டப் பெயர் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தால் வாசிக்கப்படும். இதுவே சட்டமூலத்தின் முதலாம் மதிப்பீடெனக் கருதப்படும். முதலாம் மதிப்பீடு வெறுமனே முறைசார்ந்த ஓர் அறிமுகமாகும். எனினும் எவரேனும் உறுப்பினர் கோருவாராயின் அதன் மீது வாக்கெடுப்பொன்று நடத்தப்படலாம்.

முதலாம் மதிப்பீட்டைத் தொடர்ந்து இரண்டாம் மதிப்பீட்டுக்குத் தேதியொன்று நிர்ணயிக்கப்படுகின்றது. வழமையாக சபாநாயகர் இரண்டாம் மதிப்பீடு எந்த நாளில் என்று வினா விடுக்கின்ற போது சட்டமூலத்தைச் சமர்ப்பிக்கின்ற அமைச்சர் நாளை என்று கூறுவார். ஒரு சட்டமூலத்தின் முதலாம் மதிப்பீட்டின் பின்னர்தான் வழமையாகச் சட்டமூலத்தின் பிரதிகள் உறுப்பினர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

### *சட்டமாக்கப்படுதலுக்கு முந்திய மீளாய்வு*

அரசியலமைப்பின் உறுப்புரை 121 ஜனாதிபதியோ அல்லது ஒரு பிரசையோ (அல்லது கூட்டிணைக்கப்பட்ட அல்லது அவ்வாறில்லாத பிரசையோ அல்லது கூட்டிணைக்கப்பட்ட அல்லது அவ்வாறில்லாத பிரசைகளின் குழுவோ) பாராளுமன்றத்தில் முதலாம் மதிப்பீட்டிலிருந்து ஒரு வாரத்தினுள் உயர்நீதிமன்றத்தில் சட்டமூலத்தை எதிர்த்து முறையிடுவதற்கு இடமளிக்கின்றது. உயர்நீதிமன்றம் அத்தகைய ஒரு சட்டமூலம் பற்றி அதன் தீர்மானத்தை மூன்று வாரங்களுக்குள் வழங்க வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றது. உயர் நீதிமன்றத்தில் ஆட்சேபிக்கப்படாத ஒரு சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீட்டைத் தொடரக்கூடாது. உயர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் அனுப்பிவைக்கப்படவேண்டும். அதனைத் தொடர்ந்து பாராளுமன்றம் கூடுகின்ற முதலாவது நாளன்று அந்நிகழ்வு சபையில் அறிவிக்கப்பட வேண்டும். சட்டமூலமொன்று உயர்நீதிமன்றத்தில் ஆட்சேபிக்கப்படுமாயின் நீதிமன்றத்தின் தீர்மானம் மூன்று வாரங்களுக்குள் பாராளுமன்றத்துக்குத் தெரிவிக்கப்படாதுவிட்டால் பாராளுமன்றம் இரண்டாம் மதிப்பீட்டைத் தொடரலாம்.

சட்டமூலங்களின் அரசியலமைப்பேற்புடைமை தொடர்பில் 1978 முதல் கணிசமான அளவு முன் தீர்ப்புச் சட்டங்கள் திரண்டுள்ளன. இவ்வழக்குகளில் பெரும்பாலானவை அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் பற்றிய அத்தியாயத்தை மீறுகின்ற ஏற்பாடுகளைக் கொண்ட சட்டமூலங்களில் கவனஞ் செலுத்தின.

# தமிழ்-முஸ்லிம் உறவை குலைக்கும் தீயசக்திகளை முறியடிப்போம்

## மட்டு. அம்பாறை பொறுப்பாளர் இளந்திரையன்

(மட்டக்களப்பு)

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை முறியடிக்கும் எந்த சக்திக்கும் இடமளிக்க முடியாது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

கொக்கட்டிச்சோலையிலுள்ள விடுதலைப் புலிகளின் மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது, தமிழ் - முஸ்லிம் ஒற்றுமைக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் ஓரிரு சம்பவங்கள் அண்மையில் நடைபெற்றுள்ளன. இத்தகைய சதி நடவடிக்கைகளை முறியடிப்பதற்கு பத்திரிகையாளர்களின் ஒத்துழைப்பும் தேவையாகும். தமிழ் - முஸ்லிம் இனங்களிடையே உறவை வலுப்படுத்துவதற்காக அண்மைக் காலங்களில் விடுதலைப் புலிகளுக்கும் - முஸ்லிம் சமூக பிரதிநிதிகளுக்குமிடையில் நடைபெற்று வருகின்ற சந்திப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமே ஏற்கனவே இடம்பெயர்ந்திருந்த முஸ்லிம்கள் தற்போது தங்கள் சொந்தக் காணிகளில் மீளக் குடியேறக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த உறவை முறியடிப்பதற்கு எந்தவொரு சக்திக்கும இடமளிக்க முடியாது. அண்மையில் ஏற்பட்ட ஓரிரு சம்பவங்கள் தொடர்பாக முஸ்லிம் சமூக பிரதிநிதிகளை மீண்டும் சந்தித்து உரையாடவிருக்கின்றோம். இதுபற்றி முஸ்லிம் சமாதான செயலகத்தின் இணைப்பாளர் யு.எல்.எம். முபீன் ஊடாக அறிவித்துள்ளோம். (ச)

# 13 அகதிகள் மன்னார் வந்தனர்

(மன்னார்)

தமிழ்நாட்டிலிருந்து மேலும் ஈழத் தமிழ் அகதிகள் 13 பேர் நேற்று முன்தினம் காலை தலைமன்னார் கரையை வந்தடைந்துள்ளார்கள்.

மணல் திட்டியொன்றில் படகோட்டிகளினால் இறக்கிவிடப்பட்ட இவர்கள் இலங்கைக் கடற்படையினரால் மீட்கப்பட்டு தலை மன்னார் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

மன்னார் மாவட்ட நீதிமன்ற உத்தரவின் பேரில் இவர்கள் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு பின்பு கடல் வழியாக 3,100 குடும்பங்களைச் சோந்த ஈழத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்பியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் 1500 குடும்பங்கள் பிற மாவட்டங்களைச் சோந்தவர்கள் என மன்னார் பிரதேச செயலாளர் ஆர். வரதீஸ்வரன் தகவல் வெளியிட்டுள்ளார். (ச)

# இலங்கை கிரிக்கெற் சபை திடீரென கலைக்கப்பட்டது

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெற் சபை கலைக்கப்படுவதாக விளையாட்டுத் துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க அறிவித்துள்ளார்.

கடந்த 2000 ஆம் ஆண்டு கிரிக்கெற் சபை தேர்தலுக்குப் பின் பிரபல வர்த்தகர் ஜயந்த தர்மதாசா தலைமையில் 6 பேர் கொண்ட இடைக் கால குழு அதனை நிர்வகித்து வந்தது.

எனினும் நிதி விவரங்களில் முறைகேடு மற்றும் சபையின் நடவடிக்கைகள் சரியாக இல்லை என்று ஊடகவியலாளர்களிடம் விளையாட்டுத்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தெரிவித்தார்.

கடந்த வாரம் நடைபெற்ற இலங்கை கிரிக்கெற் சபையின் புதிய நிர்வாகிகள் தேர்வில் திலங்க சுமதிபால ஒருமனதாகத் தலைவர் பதவிக்குத் தேர்வு செய்யப்பட்டார். பின்னர் டில்லியில் நடைபெற்ற சர்வதேச கிரிக்கெற் கட்டுப்பாட்டு சபைக் கூட்டத்தில் பங்கேற்க அவர் சென்றார். அதே நேரத்தில் விளையாட்டுத்துறை அமைச்சர் சார்பில் அவரது நெருங்கிய உறவினரும் டில்லிக்கு இலங்கை சார்பில் அனுப்பி வைக்கப்பட்டார். அவரே கூட்டத்திலும் பங்கேற்றார்.

இதனையடுத்து கிரிக்கெற் சபைக்குள் கருத்து முரண்பாடுகள் வலுப்பெற்றன. அதன் எதிரொலிகள் கிரிக்கெற் சபையை விளையாட்டுத்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க கலைத்துள்ளார். (ச)

# "உங்கள் இதயத்தை கடினப்படுத்திக்கொள்ளாதீர்கள்"



"கொலை செய்யப்படுவீர்" என்று சமீப காலமாக எனக்கு மிரட்டல்கள் வந்த வண்ணமாக இருக்கின்றன. இன்று இல்லாவிட்டாலும் நாளை நான் இறப்பைத் தழுவியாக வேண்டும். ஆகவே, இறப்புக்கு அஞ்சவில்லை நான். மேலும் இறப்பது நானாக இருக்க, உயிர்ப்பது சாத்திரமாகவும், சமுதாயமாகவும் இருக்கப் போகிறது" என்று, தான் கொலை செய்யப்படுவதற்கு ஒரு மாதம் முன்னதாக அறிக்கை தந்தவர் பேராயர் ஆஸ்கார் ரொமேரோ. இலட்சியவாதிகள் புதைக்கப்படுவதில்லை. மாறாக, விதைக்கப்படுகிறார்கள். நாமும்தானே...?

## தவக்காலச் சிந்தனை

இயேசுவினது உயிர்ப்பின் தாகத்தை நமக்குள்ளேயே நாம் அனுபவிக்கலாம். தன்னலம் துறந்து பிறர் நலனுக்கு நம்மை அர்ப்பணிக்கும் போது நாம் உள்ளத்தை நிரப்பும் மகிழ்ச்சியில் அத்தாகத்தை உணரலாம். நீதியை நிலைநாட்ட நம் உயிரையேவிட தயாராகும் நம் தியாக வேள்வியிலே ஞான வாழ்க்கை வாழ எடுக்கும் முயற்சிகள் அளிக்கும் மகிழ்ச்சியிலே உணரலாம். நோயுற்று கிடந்தவர் குணம் அடைவதில் அதைக்காணலாம். தாயின் கருப்பையிலிருந்து குழந்தை பிறப்பதிலிருந்து, இவ்வுலகைவிட்டு சாவில் பிரிவது வரைக்கும், நடைபெறும் நிகழ்ச்சிகள் யாவும் நிறைவாழ்வை நோக்கியே நடைபோடுகின்றன. அதற்கு காணரம் இயேசுவின் உயிர்ப்புத்தான்.

காவலன்

மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல்
மன்னாவாம் மன்னர்க் கொளி - குறள்

வலம்புரி

## சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு கிடைத்தது என்ன?

சுனாமியின் நிட்டூரம் நடந்து முடிந்து 90 நாட்கள் கடந்துவிட்டன. எனினும் அதனால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள், சொத்தழிவுகள் மனித வாழ்வியலில் என்றும் மறக்கமுடியாதவையாகிவிட்டன. சுனாமிப் பேரலைக்கு தங்கள் உறவுகளைப் பறிகொடுத்தவர்களின் விம்மல் இன்னமும் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

அவர்களால் சாதாரண வாழ்க்கைக்கு திரும்ப முடியவில்லை. குறிப்பாக பெண்கள் சிறுவர்களின் நிலை பெரும் பரிதாபத்திற்குரியது. இடம்பெயர் முகாம்களில் அடங்கிக் கிடக்கும் அவர்களின் நினைவுகள் எல்லாம் அந்த சுனாமி அலையின் கோரத் தாண்டவமே.

தங்கள் உறவுகளை கண்முன்னே இழுத்துச் சென்ற அந்தக் கொடூரமான காட்சியை 90 நாட்களுக்குள் மறந்துவிடுவது இயலாத காரியமே.

இருப்பினும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை வழமைக்கு அழைத்து வரும் பொறுப்பு மனிதநேயம் மிக்க ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும். அவ்வகையில் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணக் கொடுப்பனவில் தனி மனிதர்கள், சர்வதேச நாடுகள், பொது அமைப்புக்கள் எனப் பல தரப்பும் ஆர்வத்தோடு பங்குபற்றின.

சுனாமியின் பாதிப்புக் கண்டு உலகமே, அதிர்ந்து போனது. ஒவ்வொரு நாடும் உதவிக் கரம் நீட்டின. தாராளமாக உதவி செய்தன. அந்த உதவிகளை அரசின் பொறுப்பான அதிகாரிகள் சம்பிரதாயபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டனர். இது தொடர்பான செய்திகளும் படங்களும் ஊடகங்களில் வெளியாகின.

நிவாரணக் கொடுப்பனவுகள் கையளிக்கப்பட்டதும் பொறுப்பேற்கப்பட்டதுமான நிகழ்வுகளுடன் அந்த அத்தியாயம் முற்றுப் பெற்றுவிட்டது.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கென தாராளமான நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டபோதிலும் அவை பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சென்றடையவில்லை என்பது துன்பம் தரும் செய்தியாகும். நிவாரணத்தைப் பெற்றுக் கொண்ட அரசு அவற்றை உரிய மக்களுக்கு வழங்காதது ஏன்? இதற்குள் இருக்கக்கூடிய சூழ்ச்சி என்ன? என்பது மக்களின் அங்கலாய்ப்பு.

இதேவேளை சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் நிவாரணத்தைப் பெறுவதில் அக்கறை காட்டவில்லை என்ற செய்தியும் வெளியாகியிருப்பது விசித்திரமானதாகும். தங்களின் பிள்ளைகளை பெற்றோர்களை இழந்துபோய் துயரக்கடலில் மூழ்கியிருக்கும் எவரேனும் நிவாரணத்தைப் பெற முண்டியடிப்பார்கள் அல்லது ஊர்வலம் நடத்தி மகஜர்கள் கையளிப்பார்கள் என யாரேனும் எதிர்பார்ப்பார்களாயின் அது ஐயறிவின் சிந்தனைக்குரியதாகவே கருதப்படும்.

ஆக, எல்லாவற்றையும் இழந்துபோய் நிற்கின்ற நம் மக்களுக்கு சுனாமியின் கொடூரத்திற்க ஆளாகி அவலத்துடன் காலம் கழிப்பவர்களுக்கு வலிந்து கொடுத்து அவர்களை தேற்றுவது அரசின் கடமையாயினும் அது 90 நாட்கள் கடந்தும் ஆகவில்லை என்பதும் அதிர்ச்சியான விடயமே.

# வழுக்கையாறு புனரமைப்புத் திட்டத்துக்கு 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது ஏன்?

## அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் கேள்வி

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் நியாப் - 2 திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட 400 மில்லியன் ரூபா நிதியில் வழுக்கையாறு புனரமைப்புக்காக மட்டும் 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது குறித்து, மாவட்டத்திலுள்ள பொது அமைப்புக்களும், விவசாயிகளும் பெரும் அதிருப்தி அடைந்துள்ளனர் என யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் வெளியிட்டுள்ள பெப்ரவரி மாதத்துக்கான மாவட்ட நிலைபர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இணையத்தின் கௌரவ செயலாளர் தே. தேவானந் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள இந்த நிலைபர அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2003 ஆம் ஆண்டில் நியாப் திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட திட்டங்களுக்கென 400 மில்லியன் ரூபா நிதி உறுதியளிக்கப்பட்ட போதிலும வழங்கப்பட்ட தொகை 80 மில்லியன் மட்டுமேயாகும்.

இந்தக் குறைபாடு குறித்து இந் நிகழ்ச்சித்திட்ட மேலாண்மை இணையம் சுட்டிக்காட்டியதுடன் வழங்கப்படாமல் இருந்த நிதித் தொகையை நியாப் திட்டத்தில் வழங்கும்படியும் கேட்கப்பட்டது.

அத்துடன் நியாப் - 2 திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் 150 கிராமத்தில் பணிகளைச் செய்யவென 750 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படும் எனக்கூறப்பட்டது.

ஆயினும் இப்போதுள்ள நிலைபரத்தின்படி சமூக அபிவிருத்தித் திட்டத்திற்கென 25 கிராமங்கள் மட்டுமே தெரிவுசெய்யப்படக்கூடிய நிலை காணப்படுகிறது. நியாப் அமைப்பின் இத்தகைய நிலைப்பாடுகள் குறித்து யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள விவசாயிகள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

இதேசமயம், கடந்தவருடம் டிசம்பர் மாதம் மாவட்டத்தில் பெய்த அடை மழையைத் தொடர்ந்து மாவட்டத்தில் வெங்காயச் செய்கை பெருமளவில் பாதிப்படைந்திருந்தது. இதனால், வெங்காயச் செய்கையை நம்பியிருந்த பல விவசாயிகள் பெரும் நஷ்டமடைந்திருந்ததுடன், நிதி சார்ந்த வகையிலும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அத்துடன் நெற்செய்கையில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் உற்பத்திச் செலவு, கூலியாட்களின் கட்டணங்கள் உயர்வாலும் பாதிப்படைந்துள்ளனர்.

மேலும், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வைத்திய சாலைகளில் மருந்துக் கலவையாளர்களுக்கும், ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர்களுக்குமான வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் இருந்துவருகின்றன. எனவே இத்தகைய பதவிகளுக்குரியவர்களை நியமித்து சுகாதாரப் பகுதி அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

வடமராட்சிப் பிரதேசத்தில் சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான தற்காலிக இருப்பிட வசதிகள்அமைக்கும் பணியில் கியூடெக், சேவாலங்கா, யு.என்.எச்.சீ.ஆர், வெண்புறா மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் ஆகியவை ஈடுபட்டுள்ளன. இவையாவும் மொத்தமாக ஆயிரத்து 409 இருப்பிடங்களை அமைத்து வருகின்றன.

மேலும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் நிலையான சமாதானம் விரைவில் ஏற்பட்டுவிடும் என மக்கள் எதிர்பார்த்தனர். ஆயினும் 3 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் சமாதானத்துக்கான சமிக்ஞை தெரியாமை குறித்து மக்களபெரும கவலை கொண்டுள்ளனர். எனவே, சுனாமி பேரலை ஏற்படுத்தி கொடுத்த நல்ல வாய்ப்பை அரசு பயன்படுத்தி புலிகளுடன் நல்ல நம்பிக்கையை ஏற்படுத்தி இடைக்கால முகாமைத்துவப் பணிகளை இணைந்து மேற்கொண்டு மக்களுக்கு உதவவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (க-7,16)

# மோசடிகள் தடுக்கப்படாதுவிட்டால் பாதிப்புக்களிலிருந்து மீளமுடியாது

## "ட்ரான்ஸ் பெரன்சி" அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

பாரிய அளவில் இடம்பெற்றுவரும் மோசடிகளை தடுக்காதுவிட்டால் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்புவது தொடர்பாக எதிர்பார்க்கப்படும் இலக்கை அடைய முடியாது போகும் என "ட்ரான்ஸ் பெரன்சி" என்ற சர்வதேச அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது.

மோசடிகளை தடுப்பதற்கு கடுமையான முறையில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். புனரமைப்பு நடவடிக்கைகளில் இடம்பெற்றுவரும் நிதி மோசடிகளை தடுக்க கடுமையான சட்ட திட்டங்கள் இல்லை. இதனாலேயே இப்படியான மோசடிகள் இடம்பெற வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன.

இந்நிலையில் மோசடிகளை தடுப்பதற்கு சிவில் சமூகத்தினரையும் ஈடுபடுத்திக்கொள்வது மிக முக்கியமானது. புனரமைப்பு நடவடிக்கைகைள மறந்துவிட்டு சில அரசியல்வாதிகள் ஆழிப்பேரலையுடன் தொடர்புபடாத விவாதங்களுக்கு முதலிடம் கொடுத்து வருகின்றனர்.

கடந்த இரண்டு மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட நிவாரண புனரமைப்பு பணிகள் குறித்து அரசாங்கம் உட்பட இப்பணிகளுடன் தொடர்புடைய சகல தரப்பும் தாம் மேற்கொண்ட பணி குறித்து உண்மையான மதிப்பீடுகளை மேற்கொள்வது அவசியமானது என்றும் இந்த அமைப்பு இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் சகல தரப்பினரையும் வலியுறுத்தியுள்ளது. (க)

## மலேரியா நோய்த் தடுப்பு நடவடிக்கைத் திட்டம்

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் நிதியுதவியுடன் 306 பி.மாவட்டத்தில் வடமராட்சி மற்றும் தென்மராட்சி பிரதேசங்களில் மலேரியா நோய்த் தடுப்பு நடவடிக்கைத் திட்டம் பெரிய அளவில் மேற்கொள்ளப்படவுள்ளது என மாவட்டத்தின் ஆளுநர் லயன்.எஸ். சிவானந்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சி, தென்மராட்சி பிரதேசங்களில் மலேரியா நோயினால் அதிக எண்ணிக்கையான பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நோயின் அவலங்களில் இருந்து மக்களை மீட்டெடுக்கும் பொருட்டே லயன்ஸ் கழகம் இத்தகைய திட்டத்தை அமுல் செய்ய ஆர்வம் கொண்டுள்ளது.

இதேசமயம் மலேரியா ஒழிப்பு நடவடிக்கையை நடைமுறையில் வெற்றிகரமாக அமுல் செய்வதற்கு மலேரியா நோய்த் தடுப்புப் பிரிவின் உதவியும் ஒத்துழைப்பும் பெறப்படவுள்ளது. (க-16)

## உடற்கல்வி ஆசிரியர்கள் மகஜர் கையளிப்பு

கஷ்டப் பிரதேசங்களில் விளையாட்டுத்துறையை எவ்வாறு வழிநடத்திச் செல்வது என்பது பற்றிய கலந்துரையாடல் கடந்த 18 ஆம் தேதி உடற்கல்வி டிப்பிளோமாதாரிகள் சங்கத்தலைவர் ப.தர்மகுமாரன் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, தீவகம் ஆகிய கஷ்டப் பிரதேசங்களில் உடற்கல்வி டிப்ளோமா பட்டம் பெற்ற 53 பேருக்கு உடற்கல்வி ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டதையடுத்தே மேற்படி கலந்துரையாடல் நடைபெற்றது.

கலந்துரையாடலின் பின்னர் இது தொடர்பான மகஜரொன்று யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளனிடம் விளையாட்டுத்துறைப் பணிமனையில் கையளிக்கப்பட்டதையடுத்து இதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதாக அவர் உறுதியளித்தார். (து)

## மஹா கும்பாபிஷேக பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வேலணை மேற்கு பெரிய புலம் ஸ்ரீ மஹா கணபதிப்பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேகப் பெரு விழா எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிமுதல் நாளை மறுநாள் செவ்வாய்க்கிழமை 12 மணிவரை சுவாமிக்கு எண்ணெய்க் காப்புச் சாத்தல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.(க)

(சாவகச்சேரி)

சாவகச்சேரி, சங்கத்தானை மீனாட்சி அம்பாள் தேவஸ்தான மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் புதன்கிழமை காலை 10.43-11.43 வரையான சுப வேளையில் இடம் பெறவுள்ளது.

செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தலாம். (7-21)

## ஓம் தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

எங்கு பார்த்தாலும் செயல்முறை மதத்தைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். இவற்றை எல்லாம் ஆராய்நது பார்த்தால் வருவது ஒரேயொரு கருத்து- அதுதான் மனித நேயம்.மதம் என்பது அவ்வளவு தானா? செயல்முறை கிறிஸ்தவம் பற்றி இங்கே தினமும் கேட்கிறோம். அதாவது ஒருவன் சக மனிதர்களுக்கு ஏதோ நன்மை செய்துவிட்டான். எல்லாம் அவ்வளவு தானா?

சுவாமி விவேகானந்தர்

# தெய்வீக அருட்புகழ் இன்று வெளியீடு

அருட்கவி கலாநிதி சீ.விநாசித்தம்பி அவர்களின் 'தெய்வீக அருட்புகழ்' நூல்வெளியீடும் இறுவட்டு வெளியீடும் இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கல்யாண மண்டபத்தில். இன்று பி.ப. 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் க. தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், நூலின் தொடக்கவுரையை ஆசிரியர் ஞா.திருக்கேதீஸ்வரனும் வெளியீட்டு உரையை வலம்புரி ஆசிரியர் ந.விஜயசுந்தரமும், சிறப்புரையினை பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர், அ. சண்முகதாஸ் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

நயப்புரையை பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாதனும் தகவுரையை கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸும் நிகழ்த்தவுள்ளனர். அத்துடன் இந்நிகழ்வில் கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இன்னிசை வேந்தன் பொன். சுந்தரலிங்கம், இசைஞான திலகம் உ. இராதாகிருஷ்ணன், செல்வி பாக்கியலட்சுமி நடராஜா (நுண்கலைப்பீடம்) லயஞான சிரோண்மணி எஸ். மகேந்திரன், பிச்சையப்பா ரஜிந்தன், இசைச்சுரபி கலாபூஷணம் சு.கணபதிப்பிள்ளை, இன்னிசை வாரிதி சி. சிவஞானராஜா, இசையரசி திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன், கலைமாணி த.றொபேட், சங்கீதபூஷணம், வி.சிவஞானசேகரம் ரி.வரோதயன் ஆகியோரே கௌரவிக்கப்படவுள்ளனர். நன்றியுரையை அதிபர் சண். வாமதேவன் நிகழ்த்துவார். (க)

## 10.5 பில்லியன்...

மீதித் தொகை, அரசசார்பான உதவி நிறுவனங்களுக்கும், அரசசார்பற்ற பொது உதவி நிறுவனங்களுக்கும், மத்திய வங்கியூடாக வழங்கப்பட்டதாக கொழும்பு மத்திய வங்கி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (இ-4)

## தமிழீழத...

என்று தமிழீழ தேசிய தொலைக்காட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

விரைவில் உலகின் எல்லாப் பகுதிக்கும் தமிழீழத் தேசிய தொலைக்காட்சிச் சேவை விரிவு படுத்தப்படும் என்றும் இயக்குநர் மேலும் தெரிவித்தார்.

ஆங்கிலத்தில் 'என்.ரி.ரி.' என்ற சுருக்கப் பெயரில் தமிழீழ தேசிய தொலைக்காட்சி சேவை பெயரிடப்பட்டுள்ளது.

தமிழீழ தேசிய பூவான கார்த்திகைப் பூவை மையமாகக் கொண்டு தமிழீழ தேசியத் தொலைக்காட்சியின் இலட்சினை உருவாக்கப்பட்டுள்ளது. (இ-04)

## ஜனாதிபதி ஆணைக்குழு...

ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவராக வவுனியா மாவட்ட மேல்நீதி மன்ற நீதிபதி ஜே.விஸ்வ நாதனும் உறுப்பினராக அம்பாறை மேல்நீதி மன்ற நீதிபதி டபிளயூ. டி.எம்.டி. வேதபலவும், செயலாளராக நீதிபதி ஏ.எம்.ஆர்.கலீலும் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

ஆணைக்குழு கடந்த பெப்ரவரி மாதம் 1ம் திகதிக்கும் மார்ச் மாதம் 2ம்திகதிக்கும் இடைப்பட்டகாலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்தவுள்ளது. இக்காலப்பகுதியில் புலிகளின் மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இ.கௌசல்யன், மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் குவேனி மற்றும் போராளிகள் மீதுமேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், கொலை முயற்சி சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

விசாரணைகள் நாளை ஆரம்பமாவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் ஏ.ஆர்.எம்.கலீல் தெரிவித்தார். பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட பகிரங்க அறிவித்தலின்படி யாராவது சாட்சியம் அளிக்க விண்ணப்பித்துள்ளார்கள் எனக்கேட்டபோது,

அந்த ஆணைக்குழுவில் சாட்சியம் அளிக்குமாறு பொலிஸார், படையினர், பொதுமக்கள், விடுதலைப்புலிகள் ஆகியோருக்கும்அறிவித்தல் விடுத்திருந்தோம. இந்த அறிவித்தலுக்கு இதுவரை எவரும் எந்த விண்ணப்பத்தையும் சமர்ப்பிக்கவில்லை. இருப்பினும் மட்டு.அம்பாறை மாவட்டபோர்நிறுத்த கண்காணிப் புக்குழுத்தலைவர்கள் மாத்திரமே தங்களுடைய விண்ணப்புத்தை சமர்ப்பித்துள்ளார்கள் என்று மேலும் தெரிவித்தார். (இ-8)

## அரசு -புலிகள் இணக்கத்துடன்...

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நிர்வாகக் குழுக்கூட்டம் நேற்று இடம் பெற்றது. இக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ் உறுதிமொழியை அளித்தார்.

அங்கு சுதந்திரக் கட்சியின் எதிர்காலம் குறித்தும் கருத்துரை வழங்கிய அவர் மேலும் பேசுகையில், சுனாமியால் பாதிப்படைந்துள்ள வடக்கு · கிழக்கினை மீளக்கட்டியெழுப்ப உடனடியாக பொதுக கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும்.

அத்துடன் அதில் ஏற்படும் சாதகமான அறிகுறிகளுடன் சமாதானப் பேச்சுக்களையும் தனது அரசு உடனடியாக ஆரம்பிக்கும் என்றார்.

விடுதலைப்புலிகள் தற்போது முன்வைத்துள்ள பொதுக்கட்டமைப்பு ஒரு பொன்னான வாய்ப்புதான் என்றாலும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்குப் பகுதியை மீளக்கட்டியமைத்தல் என்ற நோக்கத்திற்காக மட்டுமே இக்கட்டமைப்பு செயற்படுத்தப்பட வேண்டும்.

விடுதலைப் புலிகள் முன்வைகக்கும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையுடன் இப்பொதுக்கட்டமைப்புக் கோரிக்கையை இணைத்துப் பேசக்கூடாது. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்குப் பகுதிகளை மீளக்கட்டமைப்பதன் ஊடாக அமைதிப் பேச்சுகளுக்கு இருதரப்பும் தயாராகமுடியும். முன்பு தனிநாடு கோரிய விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்குப் பின்னர் தங்களது நிலையை மாற்றிக் கொண்டதாகவும் தற்போது பொதுக்கட்டமைப்பு ஒன்றையே அவர்கள் கோருவதாகவும் அக்கூடடத்தில் சந்திரிகா மேலும் தெரிவித்தார். (இ-9)

# அறிவித்தல்

சுனாமியால் பாதிக்கப்பட்ட 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களின் கீழ்க் காணப்படும் விபரங்கள் எம்மால் சேகரிக்கப்பட்டு வருகின்றது. பொதுமக்களோ அல்லது பொறுப்பு வாய்ந்தவர்களோ கீழ்க் காணப்படும் விபரம் தெரிந்திருப்பின் பிள்ளைகளின் உயரிய நலன்கருதி கீழ்க்காணப்படும் முகவரிக்கோ அல்லது தொலைபேசி இலக்கத்திற்கோ உடன் அறியத்தரவும்.

- பெற்றோரை இழந்திருக்கலாம்
- நோயினால் பாதிக்கப்பட்டிருக்கலாம்
- காணாமல் போயிருக்கலாம்
- உறவினர் வீடுகளில் தஞ்சம் புகுந்திருக்கலாம்
- இல்லங்களில் அனுமதிக்கப்பட்டிருக்கலாம்
- வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கலாம்
- கல்வி புறக்கணிக்கப்பட்டிருக்கலாம்
- துஸ்பிரயோகத்திற்கு உட்பட்டிருக்கலாம்

**மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு**

அறை எண் 30,
யாழ். போதனா வைத்தியசாலை
தொ.இல: 2225657
மின்னஞ்சல் : dcpc jaffna@yahoo.com
இணையம்: www.pillaii.org


ராஜா யாழ்ப்பாணம்
12/03/05 தொடக்கம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந், வடிவேலு அங்கிதா நடித்த

லண்டன்
ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்து கொள்ளுங்கள். (பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30)


நாதன்ஸ் சினிமா
யாழ்ப்பாணம் (ஆஸ்பத்திரிக்கு முன்பாக)
இன்று [26.03.2005] முதல்
விஜயகாந்த், சூசன், செந்தில் நடித்த
நெறஞ்ச மனசு
காட்சி நேரம் 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே)

நிறைஞ்சனாஸ் (சங்கானை)
[24.03.2005 முதல்]
சிம்பு(2வேடம்), ஜோதிகா நடித்த
மன்மதன்
கா.நேரம்:-11.00, 2.45, 6.00(பு.நே)


வீடு காணி விற்பனைக்கு
நல்லூர் மருதடி வீதியில் 65/4ம் இலக்க சுற்றுமதில், கிணற்றுடன் கூடிய 2 1/2 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- சி. பொன்னம்பலம் (J.P)
119/4 முன் ஒழுங்கை
பலாலி வீதி, திருநெல்வேலி.
தொ. பே:- 021-222-7353, 0777299272
(9506)

பதவி வெற்றிடங்கள்
- அலுவலக லிகிதர்
- Computer Typist
- பரீட்சைப் பகுதி பொறுப்பாளர்
- ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள்

தேவையான தகைமைகள்
1) தெரிவுசெய்யும் பதவிக்குரிய உயர் கல்வித் தகைமைகளும் அனுபவமும்
2) நிறுவனத்திலிருந்து 3 Km சுற்றாடலில் வசிப்பவராயிருத்தல்
நிறுவன பழைய மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.
The Express Institute Irupalai, Kopay.
அதிபர்


பவர் செலூலர் ட்ரேடிங் கம்பனி

13900/=
11900/=
பக்கேச் இணைப்புக்களுடன் மேசைத் தொலைபேசி எப் பிரதேசத்திற்கும் பொருத்தித்தரப்படும். உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.
தொடர்புகளுக்கு:
office - 205/1, கஸ்தூரியார் வீதி - யாழ்ப்பாணம்
shop - 185, கஸ்தூரியார் வீதி - யாழ்ப்பாணம்
T.P.021-222-7070 FAX 021-222-7070
Mobile - 0777-281521, 0714 - 182500, 0714 - 182501

EXPOAIR
யாழ் கொழும்பு

தினசரி விமான சேவை
எக்ஸ்போ ஏயார்
T.P: 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
Your friend in the skies... E-Mail: jaffna @ expoavi.com, reservations @ expoavi. com,
வானத்தில் உங்கள் நண்பன்...


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.